Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-10 26-09-2004 ஞாயிற்றுக்கிழமை ஓசை -221

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247



## தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவு நாள் உணர்வெழுச்சியுடன் இன்று அனுஷ்டிப்பு


தியாகி லெப்-கேணல் திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நாட்களின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று தமிழீழப் பிரதேசம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடியேற்றல் என்பவற்றுடன் ஆரம்பமாகும் இறுதி நாள் நிகழ்வுகளில் தியாகி திலீபன் தியாகச் சாவடைந்த நேரமான காலை 10மணி 48 நிமிடத்திற்கு சகல இடங்களிலும் மணியொலி எழுப்பி அகவணக்கம் செலுத்தப்படும். தொடர்ந்து பகல் அடையாள உண்ணாவிரதங்களும் இரவு சிறப்புக் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்து தியாகச் சாவடைந்த யாழ். நல்லூர் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதமும், இரவு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் அல்வாய் முத்து மாரியம்

(12 ஆம் பக்கம் பார்க்க)




# கனடா-ரொரன்ரோ பொங்குதமிழ் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கில் திரண்டுள்ள தமிழர்

## தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் விழா ஆரம்பம்

(ரொரன்ரோ)

**கனடா ரொரன்ரோ நகரில் நேற்று மாலை 2.00 மணியளவில் (இலங்கை நேரப்படி நள்ளிரவு 12.00 மணியளவில்) தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான பொங்குதமிழ் நிகழ்விற்கு கனடாவில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் 50,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் திரண்டனர். ஆயினும் மக்கள் தொடர்ந்தும் வந்துகொண்டிருப்பதால் இத்தொகை மேலும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சிகள் தேசியத் தலைவர் அவர்களின் பெரியதொரு உருவப்படத்தின் கீழான மேடையில் ஆரம்பமாகின.

மாணவர்களின் உணர்ச்சிகரமான எழுச்சிப்பாடல்களுடன் ஆரம்பித்த இந் நிகழ்வுகள் சிறப்பான ஆரம்பமாக அமைந்தன.

எதிரிகளின் இனவாதப் பிரச்சாரங்களையெல்லாம் முறியடித்து விட வேண்டும் என்ற உத்வேகம் காரணமாக பல தள்ளாத, வயது முதிர்ந்தவர்கள் கூட இந்த நிகழ்வில் வந்து கலந்து கொண்டுள்ளதானது அனைவரையும் உணர்ச்சி கொள்ள வைக்கும் ஒரு நிகழ்வாக அமைந்தது.

பொங்குதமிழ் நிகழ்வு இடம் பெறும் ஒன்ராறியோ பாராளுமன்

(12 ஆம் பக்கம் பார்க்க)



பொங்கு தமிழுக்குச் செல்ல விண்ணப்பித்த

## பத்மினி சிதம்பரநாதன் பா.உ.வுக்கு புதன்கிழமைக்குப் பின்பே விசா

நேற்றுக் கனடா ரொரன்ரோ நகரில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் அவர்களுக்கு விசா தரமறுத்துள்ள கனேடிய அரசு அதை வரும் புதன்கிழமைக்குப் பிறகு தருவதாகக் கூறியிருப்பதாக திருமதி, பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு முடிந்த பின் விசா கிடைத்து என்ன பிரயோசனம்..? நிகழ்வில் கலந்து கொள்ள முடியாதே எனவும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**வர்ண உருவப்படம் இணைப்பு**

**கேணல் சங்கர்/முகிலன்**

**(வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்)**

**அவர்களின் வர்ணத் திருவுருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.**

## தமிழரின் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு இந்தியா நிலைப்பாட்டை மாற்றவேண்டும்

### குமுதம் சஞ்சிகைக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு தங்கள் நிலைப்பாடுகளை இந்தியா மாற்றிக்கொள்ள வேண்டும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் "குமுதம்" இதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இப்பேட்டியின் போது சில கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:

**மீண்டும் அமைதிப் பேச்சுக்கான சாத்தியம் எந்த அளவுக்கு இருக்கிறது?**

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் தமிழர்களுக்குச் சொந்தமான, அவர்கள் ஆட்சி செய்த தாயகத்தை அந்நியர்கள் ஆக்கிரமித்துப் பிறகு ஒரே நாடாக மாற்றினார்கள். பிறகு எங்களுடைய உரிமை பறிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அடிமைகள் ஆக்கப்பட்டிருக்கிறோம். இது எங்கள் வாழ்க்கைப்பிரச்சினை. அதிலிருந்து விடுபடப்போராடிக் கொண்டிருக்கிறோம். இந்த இலட்சியத்திலிருந்து ஒரு போதும் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. அமைதிக்கான சூழ்நிலை உருவான சமயத்தில் அதற்கு உடன்பட்டு பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் நிகழ்வுக்கு எதிரான பிரசுரம் விநியோகிக்கக் கூலிக்கு ஆளமர்த்தல்

கனடாவில் பொங்குதமிழ் நிகழ்வுக்கு எதிராக இனவாதப் பிரச்சாரம் நேற்று முன்தினம் என்றுமில்லாத வகையில் முனைப்புடன் இடம்பெற்றது.

தனிநபர்களால் மேற்கொள்ளப்படுவதற்குச் சாத்தியமற்றதான இந்தக் காழ்ப்புணர்வுப் பிரச்சாரத்திற்காக வேற்று இன மக்களும் வேலைக்கமர்த்தப்பட்டே இன்றைய நிகழ்வைக் கொச்சைப்படுத்தி இப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. இப்பிரசுரங்கள் சிறிலங்கா சார்பான இனவாத அமைப்புகள் மற்றும் தமிழினத் துரோகிகளின் வழமையான பிரச்சார யுக்திகளை உள்ளடக்கியிருந்ததோடு, அவர்களின் வசனநடையிலும் அமைந்திருந்தன என்பதோடு, முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும் கொண்டிருந்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

மரணம் ஒரு தடவைதான் வரும்.
அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்க முடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தை அழியவிட முடியுமா?

தியாகி.லெப்.கேணல் திலீபன்



# வேகமாக வாகனம் செலுத்துவோர் மீதுகடும் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்) கிளிநொச்சி நகர்ப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாகனங்களை வேகமாகச் செலுத் துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொறுப் பாளர் சி.சிவகுமார் அவர்கள் தெரி விக்கிறார்.அவர் மேலும் குறிப் பிடுகையில்:

கிளிநொச்சி நகரப்பகுதியிலும் அதனை அண்டிய ஏ-9 விதியிலும் வேகக்கட்டுப்பாடு மணித்தியாலத் திற்கு 40 கிலோமீற்றர் என எம் மால் வரையறுக்கப்பட்டும், சகல வாகன சாரதிகளும் இதனைக் கடைப்பிடிக்காது வாகனங்களை மிக வேகமாகச் செலுத்துவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. எனவே நகரப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வரை யறுக்கப்பட்ட வேகத்தில் வாகனங் களைச் செலுத்தினால் மட்டுமே விபத்துக்களைத் தடுக்க முடியும். எனவே இதனை கருத்திற்க் கொண்டு சகல வாகன சாரதிகளும் வாகனங்களை குறித்த வேகத்தில் செலுத்துமாறு கேட்டுக்கொள் கிறேன் எனக் கூறினார். (ச)


**அனைவருக்குமான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம் பிரிவு-09**

| Courses | Duration |
|---|---|
| (I) MICRO SOFT OFFICE | |
| * Introduction of the computer | 3 1/2 Months |
| * Excel | |
| * word | |
| * Access | |
| * Power Point | |
| * Windows | |
| (II) ADOBE PHOTOSHOP 7.0 | 2Months |
| (III) ADOBE PAGE MAKER 7.0 | 3Months |
| (IV) HARD WARE | 3Months |

Spcial free english classes

அனைத்து வகுப்புக்களுக்கான பதிவுகளையும் எதிர்வரும் 30.09.2004 (வியாழக்கிழமை)க்கு முன் மேற்கொள்ளுங்கள்.

வசந்தன் ஞாபகார்த்த கணினிப் பயிற்சி நிலையம்

இல555, யூனிற்இல06, இராமநாதபுரம், கிளிநொச்சி.

(இராமநாதபுரம் ம. வி. க்கு அருகாமையில்) (5129)


## 08 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 11 - 04 - 1973



தாயக மண்ணில் 26 - 09 - 1996

**லெப்டினன்ட் கௌரிதேவி**

**(குணரத்தினம் - சந்திரவதனி)**

**நாகேந்திரபுரம் புளியம்பொக்கனை**

தமிழீழந்தனை மீட்க
தலைநிமிர்ந்து சென்றவளே!
பகை வீழ்த்திப் பெருமை பெற்று
புயலாகிப் போனாயே!
எம்மை விட்டுப் பிரிந்து-நீ
எண் ஆண்டு சென்றாலும்,
எம் நெஞ்சில் உன் நினைவு
என்றென்றும் நிலைத்திருக்கும்.

குறிப்பு:-

26.09.1996 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். இந்நிகழ்வில், உற்றார், உறவினர், போராளிகள் அனைவரையும் 26.09.2004 அன்று நடைபெறும் நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
தங்கை கு..சந்திரகலா,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு
புளியங்குளம்.

முகவரி:-
நாகேந்திரபுரம்.

(சி.-10417)

## ஒன்று கூடல்

கிளி.மத்திய கல்லூரியில் இருந்து இவ்வாண்டு பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான ஒன்று கூடல் நாளை பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். எனவே கிளி.மத்தியகல்லூரியில் கல்வி கற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இவ் ஒன்று கூடலில் கலந்து கொள்ளுமாறு பொறுப்பாசிரியர் கேட்டுக் கொள்கிறார். (15,07)

## அறிவித்தல்

**வேணில் நகைத்தொழிலகம்**
**வேணில் அடகு பிடிக்கும் நிலையம்**
**வேணில் நகை மாடம்**

ஆகிய மூன்று கடைகளிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்களைக் கொடுத்து உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

உரிமையாளர்
வி.கிருஷ்ணபிள்ளை

(5130)


**கிளி. நகரில் புதிய உதயம்**

**வடபகுதி ஊர்தி உரிமையாளர்களின் நீண்டநாள் கனவு நனவாகிறது**

?

உண்மையை நாளை இப்பகுதியில் அறியுங்கள்...

(சி-10412)



வன்னியில் முதன் முதலாக

தமிழீழ மாணவர் அமைப்பும் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் இணைந்து நடாத்தும்

இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன்

**இலவச மழலைகள் கணினிப் பூங்கா**

தாயகத்தின் மழலைச்செல்வங்களின் கணினி அறிவை வளர்க்கும் முகமாக

இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில்

உதயமாகிறது.




தமிழீழ மாணவர் அமைப்பு
நடுவப்பணியகம், கிளிநொச்சி.

(சி-10418)

# பலஸ்தீன மக்களின் நல்வாழ்வுக்காக
# யசீர் அரபாத் பதவியைத் துறக்க வேண்டுமாம்

## -கொலின்பவல் கூறுகிறார்

(நியூயோர்க்)

**"பலஸ்தீன மக்களின் நல்வாழ்வுக்காக யசீர் அரபாத் தனது பதவியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். அமைதி, பலஸ்தீனத் தனி நாடு இலட்சியம் நிறைவேற வேண்டுமானால் அரபாத் ஒதுங்கிக் கொள்ளவேண்டும்" என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின்பவல் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.**



பலஸ்தீனத் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி யசீர் அரபாத் தலைமையில் பல ஆண்டுகளாகப் போராட்டம் நடக்கிறது. இஸ்ரேல் இராணுவத்தினரும் பலஸ்தீனத் தீவிரவாதிகளும் அவ்வப்போது கடும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு அமைதி ஏற்படுத்த அமெரிக்கா உட்பட பல வேறு நாட்டுத் தலைவர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர். இஸ்ரேல் இராணுவத்தினர் அதிரடி நடவடிக்கையால் கடந்த 2001 முதல் பலஸ்தீனப் பகுதியிலுள்ள ரமலாவில் யசீர் அரபாத் வீட்டுச் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நியூயோர்க்கில் உள்ள பத்திரிகையாளர் மையத்தில் நேற்று முன்தினம் கொலின் பவல் பேட்டி அளித்த போது கூறியதாவது, பலஸ்தீனத தலைவரே! இன்னும் எத்தனை நாட்களுக்கு நீங்கள் வீட்டுச் சிறையில் இருக்கப்போகிறீர்கள்?

உங்கள் வாழ்நாள் கனவன தனிப் பலஸ்தீனம் உருவாக வேண்டாமா? உங்கள் இலட்சியம் நிறைவேற வேண்டாமா? உங்கள் மக்களுக்கு அமைதி கிடைக்க வேண்டாமா? இவை எல்லாம் நிறைவேற வேண்டுமானால், உங்கள் பதவியை விட்டு உடனடியாக விலகிக்கொள்ளுங்கள். பலஸ்தீன மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும்போது உங்களால் அவர்கள் நலன் பாதிக்கலாமா? நிலைமை இப்படியே தொடர்ந்தால் அமைதி முயற்சியில் முன்னேற்றம் ஏற்படாது. அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு நீங்கள் தான் தடையாக இருக்கிறீர்கள். எனவே பலஸ்தீனத் தலைவர் பதவியை விட்டு விடுங்கள் . நல்ல வழி பிறக்கும். இவ்வாறு கொலின் பவல் கூறியுள்ளார்.



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் ஆகியோர் தமது பேச்சுக்களின் பின் இணைந்து செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகின்றனர்.

# 2000 பேரைப் பலி கொண்ட ஐவன் சூறாவளி மேலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அச்சம்

அமெரிக்காவில் ஐவன் சூறாவளி புளோரிடாவின் கிழக்குக்கரை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. இதனால் அம்மாநில மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

அந்தப்பிரதேசத்தை இந்த வருடம் தாக்கும் நான்காவது சூறாவளி இதுவாகும், மணிக்கு160 கிலோமீற்றர் வேகத்தில் புளோரிடாவின் கிழக்குப் பகுதியை நோக்கிச் சொல்வதாகவும் இன்று காலை கரையோரப் பிரதேசங்களில் இது மோதும் என்றும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே வெறயிட்டியில் இதே சூறாவளி வீசியதில் 2000பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



ஈராக் பலூஜாவில் அமெரிக்கத் தாக்குதலின் அழிவடைந்த வீடுகளின் இடிபாடுகளினுள் உள்ளூர் வாசிகள் நிற்பதைக் காணலாம்.

# அமெரிக்க சனாதிபதித் தேர்தல்: வெற்றிபெற புஷ்சிற்கு அதிக வாய்ப்பு

## புதிய கருத்துக் கணிப்புத் தகவல்

(நியூயோர்க்)

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் புஷ் வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாக கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சனாதிபதித் தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் தற்போதைய சனாதிபதி புஷ் குடியரசுக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து சனநாயகக் கட்சி சார்பில் ஜோன் கொரி போட்டி யிடுகிறார்.

இந்தத் தேர்தலில், புஷ் வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாக கருத்துக் கணிப்பில் தகவல் வெளியாகி உள்ளது. புதிதாக எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் புஷ்சிற்கு ஆதரவாக 49 சதவீத வாக்குகளும் கொரிக்கு ஆதரவாக 41 சதவீத வாக்குகளும் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. கடந்த வாரம் எடுத்த கருத்துக் கணிப்பில் புஷ் சிற்கு 50 சதவீத மக்களும், கொரிக்கு 41 சதவீத மக்களும் ஆதரவு தெரிவித்து இருந்தனர். விவாதம் அமெரிக்க சனாதிபதி வேட்பாளர் களான புஷ்,கொரி ஆகியோர் புளோரிடாவில் கோரல் கேபின்ஸ் என்ற இடத்தில் வருகிற 30 ஆம் திகதி (வியாழக்கிழமை) முதல் முறையாக நேருக்கு நேர் விவாதம் நடத்துகிறார்கள். கருத்துக் கணிப்பின் போது 4இல் ஒரு வாக்காளர்கள், "புஷ்-கொரி விவாதம் தேர்தலில் முக்கிய முடிவை எடுக்கும்" என்று கருத்து தெரிவித்துள்ளனா.

# மிக வறிய நாடுகளின் கடன் பளுவைக் குறைக்க 10 கோடி ஸ்ரேலிங் பவுணை பிரிட்டன் வழங்கும்

உலகில் மிக வறிய நாடுகளின் கடன் பளு நிவாரண உதவியாக வருடமொன்றிற்கு 10 கோடி ஸ்ரேலிங் பவுணை பிரிட்டன் வழங்கவுள்ளது.

இந்த நிதியுதவி மூலம் உலக வங்கியிடமிருந்தும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் 30இற்கும் அதிகமான நாடுகள் பெற்ற பெரும் தொகைக் கடன்களை இதன் மூலம் திருப்பிச் செலுத்த முடியும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவற்றின் வருடாந்த மாநாடு அடுத்த மாதம் நடைபெறும் போது பிரிட்டனின் நிதியமைச்சர் இந்த திட்டம் பற்றி அறிவிக்கவுள்ளார்.

இதற்கிடையே உலக வங்கியின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களுக்கு நிறைய நாடுகள் செலுத்தவுள்ள கடன் தொகையினை அதிகரிப்பது குறித்து அமெரிக்க அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

உலகின் பல பகுதிகளிலுமுள்ள வறிய நாடுகள் 20 ஆயிரம் கோடி டொலர்களுக்கும் அதிக மான தொகையை திருப்பிச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலையிலுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# எகிப்து சனாதிபதியின் மகன் கமால் முபாரக் அரசியலில் குதித்தார்

(கெய்ரோ)

எகிப்து நாட்டு சனாதிபதி முபாரக்கின் மகன் கமால் முபாரக் 40 வயதான அவர் அரசியலில் குதித்துள்ளார். இதனால் இவர் முபாரக்குக்குப் பிறகு அதிபர் ஆகும் வகையில் வாரிசாக உருவாக்கப்படுகிறார் என்ற வதந்தி கிளம்பியுள்ளது. கட்சியின் கொள்கை வகுப்புக் குழுத் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டார். ஆளும் தேசிய சனநாயகக் கட்சி மாநாடு முடிந்ததும் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அதிபர் பதவிக்கு வாரிசாக வருவீர்களா? என்ற கேள்விக்கு பதில் சொல்ல மறுத்து விட்டார். 76 வயதான ஹோஸ்னி முபாரக், அடுத்த ஆண்டு நடக்கும தேர்தலில் 5 ஆவது முறையாகப் போட்டியிடுகிறார்.



சனாதிபதித்தேர்தல் இறுதியாகச் சமாதானத்தைக் கொண்டு வரும் என்று கற்பனை செய்துகொண்டிருக்கும் ஆப்கான் இடம் பெயர்ந்த மக்கள்

# அமெரிக்கப் படையினர் தாக்குதல்; பலூஜாவில் ஏழு பேர் பலி

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் ஏழு பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 10 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். அமெரிக்க விமானங்கள் மற்றும் யுத்த தாங்கிகள் மூலமே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைகள் மீது அடிக்கடி தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திவரும் அபுஸினிஸா எனும் போராளிக் குழுக்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா வழமை போன்று அறிவித்துள்ளது.

# பணயக் கைதியான பிரித்தானியப் பிரஜையை விடுதலை செய்யுமாறு இஸ்லாமியர் கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கில் பணயக்கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரித்தானியப் பிரஜையை விடுதலை செய்யுமாறு பிரித்தானியாவிலுள்ள இஸ்லாமியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கக் கூட்டணிப் படையினர் கைது செய்து வைத்துள்ள ஈராக்கியர்கள் விடுதலை செய்யப்படாதுவிட்டால், பணயக்கைதியான பிரித்தானியரை கொலை செய்யவுள்ளதாக ஈராக்கியப் போராளிகள் அறிவித்துள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஈராக்கியப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என்று பிரித்தானிய அரசு அறிவித்துள்ளது.

இதனையடுத்து பிரித்தானியாவிலுள்ள இஸ்லாமியர்கள் ஈராக்கியப் போராளிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இஸ்லாமிய அமைப்பின் சார்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஈராக்கிலுள்ள முக்கிய இஸ்லாமியத் தலைவர்களுடன் பிரித்தானிய இஸ்லாமிய அமைப்பினர் பேச்சு நடத்தவும் தீர்மானித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கத் தாக்குதலில் அழிவடைந்த வீட்டின் இடிபாடுகளில் இருந்து பெண் ஒருவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.



கண்டாவளைப் பிரதேச நாகேந்திரபுரம் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் நூல் நிலையத்தின் கட்டடப்பகுதிக்கு கிணற்று மண் இடப்பட்டுள்ளதைப் படத்தில் காண்க. இதனை நேரில் பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் உடனடியாக அம்மண்ணை அகற்றி உரிய மண்ணினைப் பயன்படுத்தி கட்டடத்தைக் கட்டி முடிக்குமாறு ஒப்பந்தக்காரரிடம் பணிப்புரை விடுத்துள்ளார். (படம் :- சோதி, வரன்)

### - தியாகி திலீபன் நினைவாக -

# கிளி.கரைச்சிக் கோட்டத்தில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

(கிளிநொச்சி)

தியாகி லெப் கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அரசியல் துறையினரின் அனுச ரணையில் ஆற்றல் கலை, சமூகசெயன் முனைப்புக் குழுமத்தினரால் கரைச்சிக் கோட்டத்தில் 20 பாடசாலைகளில் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் கோட்டமட்ட ரீதியாக 6பேரும், பாடசாலை மட்டரீதியாக 29பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கோட்ட மட்டரீதியாக மேற்பிரிவின் கீழ் 1ஆம் இடத்தை ச. இன்பராஜ் (கிளி/மத்திய கல்லூரி), 2ஆம் இடம் ச. வசந்த குமார்( கிளி/மத்தியகல்லூரி), 3ஆம் இடம். ச.டினேஸ்காந் (கிளி/உருத்திரபுரம் ம.வி) ஆகிய மாணவர்களும் கீழ்ப்பிரிவின் கீழ் 1ஆம் இடம் இ. துவாரகா( கிளி/ அக்கராயன் ம.வி), 2ஆம் இடம் வ.நிரஞ்சினி(கிளி/ அக்கராயன் அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம் ப.ஶ்ரீரஜீவன்(கிளி/ இந்துக்கல்லூரி ஆகியோரும் பாடசாலை ரீதியாக த.பிரதீப், சி.மாதுங்கை, க.வினோ (கிளி/ அக்கராயன் ம.வி), கொ.கெனடி (கிளி/புனித அன்ரனிஸ் அ.த.க பாடசாலை), ஆ.அருள்ராஜ் (கிளி/பற்றிமா றோ.க. வித்தியாலயம்),த.தர்சியா (கிளி/இ.ராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை), நி.பேராயிரன் (கிளி/ சிவநகர் அ.த.க.பாடசாலை), செ.யாழினி (கிளி/பாரதி வித்தியாலயம்), யோ.ரசீந்தினி கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்),யோ. துஜீபா (கிளி/ வன்னேரிக்குளம் ம.வி), ம.மதிவதனி (கிளி/ கனகாம்பிகைக் குளம் ம.வி), நா.கோணேஸ்சன், க.குமரன்,( கிளி/கனகபுரம் ம.வி), க.கபில்ராஜ், பா.பாலசாதன்(கிளி/ இராமநாதபுரம் ம.வி), ஜெ.தர்சினி, ம.பிரசன்னா (கிளி/வட்டக்கச்சி ம.வி) சு.நிரஞ்சன், ச.அஸ்வத்தன் (கிளி/மத்தியகல்லூரி), கு.ரதீசியா, க.மணிவதனி(கிளி/உருத்திரபுரம் ம.வி), செ.சத்தியராஜ், பி.குகராஜா (கிளி/கிளிநொச்சி ம.வி), ப.கோகுலன், கு.வாசுதேவன்(கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சு.வர்ணன், இ.திலீபன்(கிளி/ திருவையாறு ம.வி), சு.சாளினி,தெ.நிசாந்தினி (கிளி/ புனிததிரேசா பெண்கள் கல்லூரி) போன்ற மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்கந்தபுரம் முருகன் கோவிலில் தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டின் இறுதிநாளான இன்றைய நிகழ்வில் வைத்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

# கிளி.கனகாம்பிகைக் குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றும் பகுதிகள் மக்களால் ஆக்கிரமிப்பு!

### விதை நெல் வழங்கல்

பூநகரியில் கரியாலை நாகபடுவான் நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ள விவசாயிகளிற்கும் சின்னபல்லவராயன் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளுக்கும் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்காக நூறுபேருக்கு விதை நெல் வழங்கப்படவுள்ளது. (34)

## உடன் நடவடிக்கைக்கு அரச அதிபர் பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**கிளி.கனகாம்பிகைக் குளத்திலிருந்து மேலதிக நீர் வெளியேறும் பகுதிகள் மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில் அதனால் ஏற்பட்டுள்ள ஆபத்தைக் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கரைச்சிப்பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்திலிருந்து மேலதிக நீர் வெளியேறும் வாய்க்காலின் இருமருங்கிலும் தற்போது நிரந்தர வீடுகள் அமைக்கப்பெற்று வருவதன் காரணமாக எதிர் வருங்காலங்களில் குளத்தில் இருந்து வெளியேறும் நீர் தேக்கம் கொண்டு மக்கள் குடியிருப்புக்களைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரியவந்துள்ளது.

கனகாம்பிகைக்குளம் உருவமைக்கப்பெற்ற காலம் முதல் மேற்படி வாய்க்கால் மூலமாகவே குளத்தின் மேலதிக நீர்வெளியேறி கிளிநொச்சிக்குளத்தைச் சென்றடைவதெனவும் தற்போது இவ்வாய்க்கால் கரையினை அண்மித்த பகுதிகளில் உள்ள கழிவுப்பகுதிகளில் மண்கள் கொட்டப்பெற்று நிலம் சீர்செய்யப்பெற்று வருவதுடன் நிரந்தர வீடுகளும் அமைக்கப் பெற்று வருகின்றது.

இதன் காரணமாக நீர் செல்லும் வாய்க்கால்கள் அழிக்கப்படுவதுடன் குளத்திலிருந்து வெளிச் செல்லும் மேலதிக நீர் குளத்தினை சென்றடைய முடியாது தேக்கம்கொண்டு அயற்கிராமங்களுக்குள் புகக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடிய நிலைதோன்றி வருவதாகவும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ளத்தவறும் பட்சத்தில் வரும் மாரிகாலத்தில் இரத்தினபுரம் கிராமத்தில் குறைந்தது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதென இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் மு.யோகராசா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கிளி. அரச அதிபருடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்;

நீர் செல்லும் வாய்க்கால்கள் மூடப்படுவதென்பது பாரிய பின்விளைவுகளை எதிர்காலத்தில் தோற்றுவித்துவிடும் எனவும் இது தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர், கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (சோ,கு)

# முல்லை கடற்றொழிலாளர் கூ.ச சமாசங்களின் பேராளர் மாநாடு

(அலுவலக செய்தியாளர்)

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பேராளர்கள் மாநாடு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

காலை 10.00 மணிக்கு தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைப்பணிப்பாளர் ந.ராதாகிருஸ்ணன், கடற்புலிகளின் முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் றங்கன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். கூட்டுறவுக் கொடியை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.மரியாம்பிள்ளை ஏற்றிவைத்தார்.

முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புரையை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார். உரைகளை சமாசத்தலைவர் மரியராசா, மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் உள்ளிட்டோர் நிகழ்த்தினர். பேராளர் மாநாட்டில் சமாசத்தின் மேலதிக செயற்பாடுகள் பற்றியும், அதன் அங்கத்துவ சங்கங்களின் இன்றைய நிலைபற்றியும், அதனை மேம்படுத்தி அதன் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேம்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டதுடன், அதற்கமைவான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கும் பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. இந்நிகழ்வில் அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வு மாலை 4.00மணியளவில் நிறைவுபெற்றது. (லோ,தீ)

# 'நியாப்' ஊடாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மக்களிடம் கையளிப்பு

(அலுவலகசெய்தியாளர்)





2002 ஆம் ஆண்டு செயற திட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்தின் நாகேந்திரபுரம் கிராமத்தில் நியாப் நிறுவனத்தால் அமைக்கப் பட்ட 5வீதிகள், 3 பொதுக் குடி நீர்க் கிணறுகள், பொது நோக்கு மண்டபம், புனரமைக்கப்பட்ட குளம் என்பன அக்கிராம மக்களிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு நியாப் திட்டப் பிரதேச இணைப்பாளர் கனகேஸ்வரி தலைமையில் ஆரம்பமானது. நிகழ்வின் மங்கல விளக்கை கிளி/ அரச அதிபர் தி.இராசநாயகம், கிளி/ உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை தருமபுரம் வலயப்பொறுப்பாளர் வி.சுடர் விழியன் ஏற்றிவைத்தார். வரவேற்புரையை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ.வைரமுத்து நிகழ்த்தினார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.தனபாலசிங்கம், கிளிநொச்சி கமநல சேவை உதவி ஆணையாளர் வ.இராஜலிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவயோகன், தெய்வக்குழந்தைகள் அமைப்பின் தலைவர் பூராசா, கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் இ.பற்பநாதன், ஓய்வுபெற்ற கிராம சேவகர் எஸ்.எஸ் சின்னத்தம்பி ஆகியோர் உரைநிகழ்த்தினர். கிளி/அரச அதிபர் தி.இராசநாயகம் சிறப்புரை நிகழ்த்தினார். நியாப் திட்ட உத்தியோகஸ்தர் அ.விஜய்கிருஷ்ணன், பரமோதயன், சமூக உணர்வூட்டல் பகுதியைச் சார்ந்த கோபிநாத், பிரதேச இணைப்பாளர் வே.கனகேஸ்வரி மற்றும் கிராம அலுவலர்கள் மாதர் சங்கம், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்துகொண்டனர். பொது நோக்கு மண்டபத்திற்கான பத்திரத்தினை கிளி/அரச அதிபர் நாகேந்திரபுரம் மாதர்சங்கத் தலைவியிடம் கையளித்தார். அதேபோன்று வீதிகள், குளம் என்பனவும் சமூக உணர்வூட்டல் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்ட. பிற்பகல் 2.30 மணியளவில் உருத்திரபுரம் சிவநகர் இலக்கு கிராமத்தில் பொது மண்டபம் மற்றும் குளம், வீதி என்பன பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி/அரச அதிபர் கலந்துகொண்டு பொதுமண்டபத்திற்கான பத்திரத்தினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம் கையளித்தார். நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி. க. சுலோஜனா மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (சோ,கு,14)

# போஷாக்கு மட்டக் கணிப்பீடு

(மல்லாவி)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கடந்த 22,23ஆம் திகதிகளில் துணுக்காய்ப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான நிறை, உயரம் எடுத்த நிகழ்வில் 33 சுகாதார நிலையங்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளின நிறை,உயரம் எடுத்தலில் போஷாக்கு மட்டம் கணிக்கப்பட்டு சிறு உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டது. குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை பெற்றோர் இந்நிகழ்வில் அறியக்கூடியதாக இருந்துள்ளது. என மல்லாவி சகாதாரப் பரிசோதகர் கெ.அரவிந்தன் தெரிவித்தார். (24)

# விவசாயிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

(அலுவலகசெய்தியாளர்)



மேட்டு நிலப் பயிர் மற்றும நெற் பயிர்ச் செய்கையாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் ஜெயந்திநகர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. ஜெயந்திநகர் கமக்கார அமைப்பு தலைவர் ஆ.நடராஜன் தலைமையில் நடைபெற்ற மேற்படிப் பயிற்சிக் கருத்தரங்கில் விவசாய போதனாசிரியர்கள் சௌந்தரராஜன், நவநீதன், செல்வராஜா கணேசலிங்கம், தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவன மாவட்ட இணைப்பாளர் செல்வராசா, கிளி. பிரதேசப் பொறுப்பாளர் மங்களேஸ் ஆகியோர் பயிர்ச் செய்கை குறித்து விளக்க உரை நிகழ்த்தினர். மேற்படி பயிற்சிக் கருத்தரங்கில் ஜெயந்திநகரைச் சேர்ந்த 216 பயனாளிகள் கலந்து பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தியாகத்தின் சிகரம்

# தியாகி லெப்.கேணல் திலீபன்

திருவையூர் சி.ஜெயதீபன்



அமைதிப்படையென வந்து அட்டூழியங்கள் புரிந்தவரை அடக்கு முறையாளர் என உலகிற்கு உணரச் செய்தவனின் நினைவு நாட்களில் நாம் கலந்திருக்கின்றோம். தியாகி திலீபனின் தீர்க்க தரிசனமான கருத்துக்கள் இன்றைய போரியல் பரிமாணத்தில் எந்தளவிற்கு சாத்தியப்பாடாக அமைந்தது என்பது பற்றி அனைவருக்கும் தெரியும்.

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல இராணுவ முகாம்களின் முன்னால் மக்களால் மறியல் போராட்டம் நடத்தப் பட்டது. அந்த வகையில் யாழ். கோட்டையின் முன் நடந்த மறியல் போராட்டத்தில் உரையாற்றிய திலீபன் தனது உரையில் தன் முன்னால் இருந்த கோட்டையில் புலிக்கொடி பறக்கின்ற காலமே தமிழ் மக்களின் விடிவு காலம் என முழக்கமிட்டான். கோட்டையிலே புலிக்கொடி பறக்க வேண்டுமென்ற தனது கனவை வெளிப்படுத்தினான்.

திலீபன் தியாகப் பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பின்னர் 1990 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் முற்றுகையிட்டு தாக்கத் தொடங்கினர். 110 நாட்கள் தொடர்ச்சியாக நடந்த சமரில் யாழ்.கோட்டை புலிகளிடம் வீழ்ச்சி கண்டதுடன் 'சியாமா செற்றி' வான் கலமொன்று பண்ணைக் கடலிற்குள் சுட்டு வீழ்த்தப்பட்டது. திலீபன் கூறியது போல் யாழ். கோட்டையைக் கைப்பற்ற பல புலிவீரர்கள் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கி மீண்டும் கோட்டையில் புலிக்கொடியை ஏற்றி புதிய வரலாறு எழுதினர். திலீபனின் 3ஆம் ஆண்டு நினைவு நாளில் யாழ். கோட்டையில் தமிழரின் கொடியான புலிக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

தேசியத் தலைவரின் சிந்தனைக்கமைய திலீபனால் முன்னெடுக்கப்பட்ட பல பிரிவுகள் இன்று தமிழீழத்தில் ஆழ வேரூன்றி விடுதலை விருட்சங்களாக மிளிருகின்றன. விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு திலீபனால் முன்னெடுக்கப்பட்டதே. தமிழீழ மாணவர்களிற்கு இலவச கணினி கற்கை, பொது அறிவுப்போட்டிகள் போன்ற பாடரீதியான செயற்பாடுகளுடன், மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு ரீதியாகப் பல திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஆணுடன் பெண் சமம் என்பதை வெறும் பேச்சில் மட்டும் அன்றி செயலிலும் செய்து காட்டியவர் திலீபன். தமிழீழ மகளிர் அமைப்பு, களங்களில் மட்டும் அன்றி ஒவ்வொரு விடுதலைப் பணிகளிலும் வீறுடன் வெற்றிநடை பயில்கின்றது என்றால் கூட திலீபனின் பணி அங்கு இருக்கின்றது. ஆரம்ப கால கட்டத்தில் லெப் கேணல் விக்ரர் தலைமையிலான சிறிய மகளிர் அணியினர். இன்று சோதியா படையணி, மாலதி படையணி, சுகன்யா படையணி, திலகா படையணி என தரைத் தாக்குதல் படையணிகளாகவும் நளாயினி தாக்குதல் படையணி, அங்கையற்கன்னி நீரடிநீச்சற் பிரிவு போன்ற கடற் தாக்குதல் படையணிகளாகவும் ஒவ்வொரு துறையிலும் நிர்வாக கட்டமைப்புக்களிலும் மகளிரின் பணி அளப்பரியது.

இந்திய இராணுவ காலத்தில் தமிழ் விரோதக் குழுக்களும், தேச விரோதச் சக்திகளும் பலஇன்னல்களை தமிழ் மக்களுக்கு கொடுத்து வந்ததுடன் சமூகத்தில் பல சமுதாயப் பிரச்சினை தலைவிரித்தாடியது. மதம், சாதி என மக்கள் பிளவுபட்டு இருந்த காலத்தில் இவற்றைத் தீர்த்து ஒன்றுபட்ட மக்களாக ஒருங்கிணைந்த சக்தியாக மாற்ற அடிப்படைப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக தமிழீழ கிராமிய நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இதிலும் திலீபனின் பங்களிப்பு இன்று பல மாற்றங்களைப் பெற்று மாவட்ட நீதிமன்று மேல் முறையீட்டு நீதிமன்று உச்ச நீதிமன்று என வளர்ச்சியடைந்து நிற்கின்றது. சட்டக் கோவை உருவாக்கத்துடன் பிணக்குகள் சுமுகமாக தீர்த்து வைக்கப்படுகின்றது.

இதைப்போன்றே திலீபனால் தலைவரின் எண்ணத்தை செயற்படுத்துவதற்காக உற்பத்திக் குழுக்கள் தமிழர் சலாசார அவை, தமிழீழ விழிப்புக் குழுக்கள் தமிழீழ தேசபக்தர் அமைப்பு என்பன இன்று பல துறைகளாகப் பிரிவுகளாக வளர்ந்து விழுதெறிந்து நிற்கின்றன.

மக்கள் விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் போது தான் ஒரு விடுதலைப் போராட்டம் வெற்றியடையும் என் பதை தெளிவாக உணர்ந்து செயற்பட்டவர் திலீபன். 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்ற திலீபனின் வீரவரிகள் முற்று முழுதாக 1999 இல் செயல் வரிகளாகிய எல்லைப்படை, மாணவர் படை, கிராமியப் படை என மக்கள் அணி அணியாக அணி திரண்டனர். மக்கள் அலை ஓயாத அலையாக வீசத் தொடங்கியது. ஓயாத அலை 3 இல் மக்கள் தோளோடு தோள் நின்றுழைத்தனர். எல்லையில் காவலரணில் கண்விழித்து காவல் நின்றனர். குடும்பச் சுமையை விட தேசப்பணி முதன் மையானது என உணர்ந்து செயலாற்றினர். இந்த வரலாற்று மாற்றங்களால் ஒட்டு சுட்டானில் தொடங்கி யாழ்ப்பாணம் வரை ஓயாத அலைகள் வீசின. அங் குலம் அங்குலமாக பல மாதங்களாக சிங்கள இராணுவம் பிடித்த இடங்களை சில நாட்களில் புலிகள் மீட்டெடுத்தனர். சமாதானத்தின் கதவுகளை இறுக மூடிய பௌத்த பேரின அரசாங்கம் மீண்டும் சமாதானக் கதவினை அகலத் திறந்தது என்றால் அதற்கு ஓயாத அலையின் பலமான அடியும் ஓர் காரணி. திலீபனின் அந்த சிந்தனை வடிவம் செயலானதுடன் இம்மாபெரும் வெற்றியை பெறமுடிந்தது. இவ்வாறான மக்கள் படையால் தான் வியட்நாமில் "தியன் பியன் பூ' சண்டையில் வியட்கொங் விடுதலைப் படை வெற்றியடைந்தது. அமெரிக்க கூட்டுப்படை தோல்வியைக் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

சிறுவயதில் இருந்து வைத்தியராக வரவேண்டும் என்பது தான் திலீபனின் கனவாக இருந்தது. மக்களது துன்ப துயரங்களில் பங்கு கொண்டு அவர்களிற்கு சேவையாற்றுவதையே அல்லும் பகலும் நினைத்தவனின் ஆசை இன்று தியாகி லெப் கேணல் திலீபனின் மருத்துவ சேவையினரால் நிறைவேற்றப் பட்டு கொண்டு இருக்கின்றது. மருத்துவமனைகளற்ற பிரதேசங்களிலும், மற்றும் நடமாடும் சேவை மூலமும் நோயாளர்களிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. சமூக நலத்தொண்டில் திலீபனுக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்ததோ அவ்வாறே அவரால் விட்டுச் சென்ற பணி நிறைவேற்றப் பட்டுள்ளது.


உலக வரலாற்றில் முதல் முதலாக நீராகாரம் இன்றி உண்ணா நோன்பு இருந்து வீரச்சாவடைந்த திலீபனின் இலட்சியத்தை வரித்து அவர் தடம் பதிப்போம். அந்த வீரமறவனின் நினைவு நாளில் விடுதலை உணர்வுடன் நாம் நடப்போம்.











# பாரதத்துடன் போர் தொடுத்த பார்த்தீபனுக்குப் பாமாலை!

## நின்று சிரிக்கிறாய் நட்சத்திரமாய்!



தீக்குச்சி முனையாய்த்
திரண்டது உனக்குள் தீ
பிராந்திய நலனென்ற
பெட்டிமுகம் உரச உரச அது
பற்றி எரிந்து உன் வயிற்றுள்
தொற்றிக் கொண்டது - நீ
எல்லோர் முன்னிலையிலும்
எரிந்தாய்

நிறைவேற்றல் என்கின்ற
நீரூற்றி உன் தீயை அணைக்க வேண்டியவர்கள்
நீ எரிந்து கருகட்டும் என்று
பேரம் என்கின்ற நெய்யூற்றினார்கள்.
நீ
பெருஞ்சுவாலையாய் எரிந்தாய்.
உன்னை எரித்தவர்கள்
இறு மாந்திருந்தார்கள் பின்னாளில்
தங்களையும் அது பற்றியெரிக்குமென்று
எண்ணியிருக்காமல்!
உன்னிடம் பற்றிய தீ இன்னமும்
எரித்துக் கொண்டேயிருக்கிறது.
பல பகை முகங்களை!
வெற்றிகளோடு நாம்
நிமிர்கின்ற நேரங்களிலெல்லாம்
நீள் விசும்பில் நின்று சிரிக்கிறாய்
நீ நட்சத்திரமாய்!

*ஆதிலட்சுமி சிவகுமார*

## உன் கனவு பலித்திடும்

பன்னிரண்டு நாள் பசிகிடந்து
சத்தியப்போர் தொடுத்தாய்
பாரத நாட்டுக்கு அகிம்சை
பாடம் கற்றுக்கொடுத்தாய்

இறுதியாக நீ உதிர்த்த
உறுதிமொழி உண்மையானது - இங்கு
மக்கள் புரட்சி வெடித்தது
மண் சிலிர்த்து எழுந்தது.

எல்லைப்படையாக, துணைப்படையாக
களம் இறங்கிய எம்மறவர் படை
பொங்கு தமிழாக பொங்கி எழுந்தது
நீ முழங்கிய யாழ். மண்ணிலே

தேர்தல் களத்தில் தேசப்பற்றுடன்
வடம்பிடித்தது, வெற்றி குவித்தது
அத்தனையும் கண்டிருப்பாய் - உன்
கண்குளிர மாவீரருடன் வானமதில்

சமாதான காலத்தில் சத்தியம் செய்கின்றோம்
எங்கள் தலைவனின் காலத்தில் - உன்
கனவு பலித்திடும் நிச்சயமாக
அதுவரை தொடரும் எம் பயணம்.

*த. யது*



## திலீபத் தீ...!

ராஜீவும் ஜேயாரும்
இரகசிய ஒப்பந்தம்
தமிழரின் வரலாற்றில்
பெரும் கண்ணீரின் ஆரம்பம்
காந்தீயம் படையெடுத்து
ஊரெல்லாம் வலம் வந்து
உயிர்குடித்த காலமதில்
பிறப்பெடுத்த திலீபத்தீ.

வேல்கொண்டு படைவந்து
வெறியாட்டம் போடவர
பாரெல்லாம் பார்த்து நிற்க
பாரதமோ புன்னகைக்க

காந்தீய வழிப்படைக்கு
காத்திரமாய் அடிகொடுக்க
பார்திருந்த பார்த்தீபன்
போர் தொடுக்கத் தொடங்கிவிட்டான்.

பன்னிரெண்டு நாள் திலீபன்
பசிகிடந்து போரிட்டான்
அகிம்சையின் பிறப்பிடமோ
அணுவளவும் அசையவில்லை.
பாடையேறிப் போகும் வரை
பார்த்திருந்த பாரதமே - உன்
கோரப் பசியதற்கு
பார்த்தீபனைப் பலியெடுத்தாயே!

*– சசிக்குமார்*

## நின் இலட்சியக் கனவு ஈடேறுதையா

திலீபா....!
ஊரெழுவில் உதித்த உத்தமனே
ஊரழவைத்தே உருகினையோ...?
பாரதம் புரிந்த பாதகத்தால்-நல்லை
தேரோடும் வீதியில் கருகினையோ...?

பன்னிரு நாளாய் பசித்தீயில் கிடந்து
உன்னுயிர் மாய்த்தாய் உணர்வுகளழிந்து
தன்னலம் கருதா-தமிழ் மண்ணையே போற்றும்
'அண்ணனின்' தம்பியாய் அக மகிழ்ந்திருந்தாய்

விலக்குப் பிடிக்க வந்தோரிடம்
வீச்சரிவாள் எதற்கென்றாய்
இலக்கெமது தமிழீழம்-அதன்
வீரம் அடங்காதென்றாய்
மடக்கப்பார்த்தோரை
மடையர்களாயாக்கிவைத்து
விளக்கானாய் எம்தேச
விடிவிற்கானாய் நீ மாண்டாய்....


அன்னை தந்தைக்கென்று நீ வாழவில்லை.
அயல் நாடு செல்ல வழி தேடவில்லை...
உன்னை எமக்காக நீயும் தந்து மறைந்தாய்...
உன்னதத் தியாகியாய் உலகத்தோர்
நெஞ்சில் நிறைந்தாய்...

செந்தமிழ் வீரம் சீர்கெடுவதோ...?
'வந்தவரால்' எம் வாழ்வழிவதோ...?
முந்தையர் ஆண்டிட்ட மண்ணடா-இது
மண்டியிடுமென்பது கனவடா
பொங்கி நின்ற எம் புலி வீரத் திலீபன்
முழங்கிய வேதம் - தினம்
வழங்குது வீரம்...

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் - ஈழச்
சுதந்திர மண் விரைவில் மலரட்டும்"
பக்கத்து திருந்தோர் பார்த்திருக்கப் பகன்றவரி
இக் காலத்தில் நிறைவேறுதையா - நின்
இலட்சியக்கனவது ஈடேறுதையா...

*'புங்கையூர்' காந்தன்*

## தீந்தமிழ்த் தெய்வமிவன்



ஊரெழு மண்ணில் உதித்தெழு ஞாயிறு
உத்தம திலீபனவன்!
காரிருள் ஓட்டியே கதிரொளி வீசிடும்-வீரக்
கரிகாலன் தம்பியிவன்!

போரினிலாடிடும் வேங்கைகள் தளபதி
பெரும் அரசியல் ஞானியவன்!
வரும் தடைகளை உடைத்திட வழிதனைக் காட்டிய
வரிப்புலி வீரனிவன்!

மக்கள் புரட்சியை கோட்டையில் தொடக்கிய
மறத்தமிழ் வீரனவன்!
மகாத்மா காந்தியை விஞ்சிய வேள்வியை-நெஞ்சினில்
மூட்டிய
செந்தமிழ்த் தீரனிவன்!

வல்லரசுடனே போரிடும் வல்லமையீந்த
வரிப்புலி வேங்கையவன்!
சொல்லினில் கந்தகம் பூசிய சுந்தர
செந்தமிழ்த் தோழனிவன்!

பாரதம் அஞ்சிட அறப்போரினைத் தொடுத்த
நிகரில்லாத் தீரனவன்
பாம்பினைப் புழுவெனப் பாதத்தால் நசித்திட்ட
பைந்தமிழ்ச் செல்வனிவன்!

வீரத்தை விற்றிட விரும்பாப் புலியணி
வெஞ்சின வேங்கையவன்!
தேசத்தை காத்திட தீயென எழுந்திட்ட
தீந்தமிழ்த் தெய்வமிவன்!!

-ம.ஓவியன்-

## வெய்யதுயர் சுமந்தவெங்கள் திலீபனையே வணங்குகின்றோம்

தெய்வத்தின் முற்றத்தில் தெய்வீகம் வளர்ப்பதற்காய்
மெய்வருத்தித் தியாகத்தின் மேனிலையில் வீற்றிருந்து
கையமர்த்தி மக்களுக்கோர் தெளிவுரைகள் வழங்கியவன்
வெய்யதுயர் சுமந்தவெங்கள் திலீபனையே வணங்குகின்றோம்


தன்னினத்தின் விடுதலைக்காய் தன்னிலத்தை அறுத்தெறிந்து
தன்மானம் காப்பதற்காய் தலைவனுரை சுமந்துநின்று
என்னாளும் சோர்வகற்றிச் சொற்பெருக்கால் மக்களுள்ளம்
தன்னாட்சிக் குறுதுணையாய் கவர்ந்தெடுத்த செயல் வீரன்

சிங்களத்தின் கொடுஞ் செயலால் கொதித்தெழுந்த தலைவனது
வெங்களத்து வீரனெனச் சுழன்றோடிக் கைகொடுத்தான்
அங்கம் சிலிர்க்க வைக்கும் தியாகத்தின் வேள்வியிலே
மங்காத புகழேந்தி திலீபனெமைக் காத்தானே

கற்றபெருந் தலைவரெலாம் கவலையற்றுச் செயலிழந்தார்
அற்ப சொற்ப சலுகை பெற்று அடிமைகளாயுடல் சுமந்தார்
கற்றுயர்ந்தும் தற்பெருமை கொள்ளாத திலீபன் எங்கள்
கொற்றவனின் இலட்சியத்துக் குயிரளித்துத் தேவனானான்

மேடைகளிற் பொழிந்திடுவார் செயலிலதைக் கைநெகிழ்வார்
பாடைகட்டித் தமிழினத்தை வேகவைத்த அரசினுக்கு
சாடையாகச் சாய்ந்தவற்றால் வாழ்வின் சுகம் அனுபவிப்பார்
பீடையெலாம் சுமந்து நின்று திலீபனெமைக் காத்தானே.

"மாரீசன்"







# இருள் சூழ்ந்த தேசத்தில் மெழுகாய் உருகி ஒளி தந்தவன்

ஊரெழு மண்ணில் உதயமாகிய உத்தமனே!
பாரதப் படை எதிர்த்து அகிம்சைப் போர் புரிந்த பார்த்தீபமே!
வேரோடு எமை அளிக்க வெள்ளமெனப் பகைவந்தபோது
போராடு தமிழா புலியாகியென்று உரைத்தவனே!
உண்ணா நோன்பு மேடையில் அண்ணா நீ வீற்றிருந்ததை-எம்
கண்ணாரப் பார்த்து 17 ஆண்டுகள் உருண்டோடி விட்டனவே!
நல்லைக் கந்தன் வீதியில் அகிம்சைத் தேரேறிப் போர் செய்த வீரத் தளபதியே!


ஈராறு நாட்களில் பாரதத்தின் முகத்திரை கிழித்தாய் அண்ணா,
விடுதலையின் பேரொளியாய் விண்ணுயர்ந்த திலீபன் அண்ணாவே!
ஈழத்தாயின் விடுவிற்காய் இன்னுயிரை உருக்கினாயே!-அன்று
தேசத்தின் விடிவெள்ளியில் தெரியுதண்ணா உன் முகம்.
விடுதலைக்காய் வீழ்ந்தவரின் நினைவுடன் நிமிர்ந்து நிற்கின்றோம்.
தாயகத்தின் தலைவன் பெயர் சொல்லி மீட்டிடுவோம்-எம் தேசமதை

ம. சுரேந்திரன்

## புதுப்பிரசவம்

கத்தியின்றி
இரத்தமின்றி
நல்லை வீதியில்
யுத்தம் ஒன்று
நடந்தது.
காந்தி காந்தி என்று
வாழ்த்தி எடுத்தவரின்
வயிறு கிழிக்க
வல்ல புலி
பசி கிடந்தான்.
பத்தோடு இரண்டு
பன்னிரண்டு நாளில்
பத்தரை மாற்றுத் தங்கம்
பறிபோனது.
பதறிப் போனோம்
பார்த்தீபன் உயிர்
பறித்தால்
பாதைமாறிப்
போவோம் என்று
கனவில் கிடந்தார்
பாரதப் பிரதமர்.
தடைகள் தகர்க்க
தலைகள் நிமிர்த்தினான்
தலைவன்.
தமிழினிச் சாகாது
எனத் திரண்டன
தமிழர் புயங்கள்.
பூக்கள் எல்லாம்
போர்க் கோலம்
பூண்டன
புல்லின் நுனியிலும்
புரட்சி வெடித்தது.
புல்லாங்குழலிசை
இடியெனவானது.
பார்த்தீபன் கண்ட
கனா
பாதியில் நிற்காது
பாயும் புலி ஓர் நாள்.
பறக்கும் படைகள் எல்லாம்;
பிறக்கும் தமிழீழம.

- ப.பகீரதன்



## விடியலுக்கில்லை தூரம்

எமக்காக அணைந்தவனே!
உன் மலரடியில் இன்று
உனக்காக நாம் ஏற்றும்
தீபங்களின் ஒளியிலாவது
எமக்கொரு விடிவு பிறக்கட்டும்.
நீ நிழலாகிவிட்டாலும்
உனக்குப் பின்னே ஆயிரம் ஆயிரமாய்
அணிவகுத்து நிற்கிறார்கள்
உனது நிஜங்கள்.
அவர்கள் உள்ளவரை,
அந்த அணிவகுப்பு இருக்கும் வரை
எமது விடியல்கள்
வெகு தூரத்தில் இல்லையென்ற
அசையாத உறுதி
எம்மிடம் நினைத்திருக்கும்.

- புதுக்கவி.

## மக்கள் புரட்சி வெடிக்கட்டும்

பொய்யுரைக்கும் நீசர்களின்
போலித்தனம் காட்டிடவே
நல்லைநகர் வீதியிலே
நாயகனே நீ கிடந்தாய்.
மெய்யாய் நாமெல்லாம்
செய்யும் வழி தெரியாமல்
சுற்றிக் கடலென
கலங்கி நின்ற போதும்,
சற்றும் தயங்காமல்
சத்திய வேள்வியில்
நீ குதித்தாய். பெரும்
சரித்திர நாயகனாய்
நீ நிமிர்ந்தாய்.
ஆறிரண்டு நாளாய்
ஆகாரம் ஏதுமின்றி
நீர் கூட அருந்தாமல்
நீ தவம் இருந்தாய்
நேசக்கரம் நீட்டி- எமை
மோசம் செய்ய வந்த
நீசர் மனம் இரங்கவில்லை.
நீள்துயிலில் நீ போனாய்.

அண்ணா திலீபா!
ஆண்டுகள் ஓடோடி
ஆயிரமாய் மறைந்தாலும்,
நெஞ்சத்தில் உன்நினைவு
நிச்சயமாய் மறையாது.
நீண்டு உன்புகழ்
நிச்சயமாய் நிலைக்கும்.
நீ நினைத்த தமிழீழம்
நிச்சயமாய் மலரும்.

அண்ணா திலீபா!
மக்கள் புரட்சி இங்கே வெடிக்கும்
மகத்தான வெற்றி ஒன்று பிறக்கும்

மா.தீபன்
(போராளி)







# பயணியர் பேருந்துப் பணி

## கல்விளான் – புளியங்குளம்

மேற்படி பேருந்துப் பணி 01.10.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

### நேர ஒழுங்கு

**கல்விளான் – புளியங்குளம்**

| கல்விளான் | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|
| மாலை 02.30 | 03.00 | 03.25 | 04.00 | 04.45 |

**புளியங்குளம் – கல்விளான்**

| புளியங்குளம் | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | கல்விளான் |
|---|---|---|---|---|
| காலை 08.30 | 09.15 | 09.50 | 10.15 | 10.45 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு.

# பயணியர் பேருந்துப் பணி

## கிளிநொச்சி – முகமாலை

மேற்படி பேருந்துப் பணி 01.10.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

### கிளிநொச்சி – முகமாலை

நேர ஒழுங்கு

| கிளிநொச்சி | - பரந்தன - | இயக்கச்சி - | புதுக்காட்டுநகர் | - முக மாலை |
|---|---|---|---|---|
| காலை 06.00 | 06.20 | 06.45 | 06.50 | 07.05 |
| காலை 06.20 | 06.40 | 07.05 | 07.10 | 07.25 |
| காலை 06.40 | 07.00 | 07.25 | 07.30 | 07.45 |
| காலை 07.00 | 07.20 | 07.45 | 07.50 | 08.05 |
| காலை 07.20 | 07.40 | 08.05 | 08.10 | 08.25 |
| காலை 07.40 | 08.00 | 08.25 | 08.30 | 08.45 |
| காலை 08.00 | 08.20 | 08.45 | 08.50 | 09.05 |
| காலை 08.20 | 08.40 | 09.05 | 09.10 | 09.25 |
| காலை 08.40 | 09.00 | 09.25 | 09.30 | 09.45 |
| காலை 09.00 | 09.20 | 09.45 | 09.50 | 10.05 |
| காலை 09.20 | 09.40 | 10.05 | 10.10 | 10.25 |
| காலை 09.40 | 10.00 | 10.25 | 10.30 | 10.45 |
| காலை 10.00 | 10.20 | 10.45 | 10.50 | 11.05 |
| காலை 10.20 | 10.40 | 11.05 | 11.10 | 11.25 |
| காலை 10.40 | 11.00 | 11.25 | 11.30 | 11.45 |
| காலை 11.00 | 11.20 | 11.45 | 11.50 | 12.05 |
| காலை 11.20 | 11.40 | 12.05 | 12.10 | 12.25 |
| காலை 11.40 | 12.00 | 12.25 | 12.30 | 12.45 |
| பகல் 12.00 | 12.20 | 12.45 | 12.50 | 01.05 |
| பகல் 12.20 | 12.40 | 01.05 | 01.10 | 01.25 |
| பகல் 12.40 | 01.00 | 01.25 | 01.30 | 01.45 |
| பகல் 01.00 | 01.20 | 01.45 | 01.50 | 02.05 |
| பகல் 01.20 | 01.40 | 02.05 | 02.10 | 02.25 |
| பகல் 01.40 | 02.00 | 02.25 | 02.30 | 02.45 |
| பகல் 02.00 | 02.20 | 02.45 | 02.50 | 03.05 |
| பகல் 02.20 | 02.40 | 03.05 | 03.10 | 03.25 |
| பகல் 02.40 | 03.00 | 03.25 | 03.30 | 03.45 |
| மாலை 03.00 | 03.20 | 03.45 | 03.50 | 04.05 |
| மாலை 03.20 | 03.40 | 04.05 | 04.10 | 04.25 |
| மாலை 03.40 | 04.00 | 04.25 | 04.30 | 04.45 |
| மாலை 05.00 | 05.20 | 05.45 | 05.50 | 06.05 |

### முகமாலை – கிளிநொச்சி

நேர ஒழுங்கு

| முகமாலை (பளை) | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.15 | 07.20 | 07.45 | 08.05 |
| காலை 07.20 | 07.35 | 07.40 | 08.05 | 08.25 |
| காலை 07.40 | 07.55 | 08.00 | 08.25 | 08.45 |
| காலை 08.00 | 08.15 | 08.20 | 08.45 | 09.05 |
| காலை 08.20 | 08.35 | 08.40 | 09.05 | 09.25 |
| காலை 08.40 | 08.55 | 09.00 | 09.25 | 09.45 |
| காலை 09.00 | 09.15 | 09.20 | 09.45 | 10.05 |
| காலை 09.20 | 09.35 | 09.40 | 10.05 | 10.25 |
| காலை 09.40 | 09.55 | 10.00 | 10.25 | 10.45 |
| காலை 10.00 | 10.15 | 10.20 | 10.45 | 11.05 |
| காலை 10.20 | 10.35 | 10.40 | 11.05 | 11.25 |
| காலை 10.40 | 10.55 | 11.00 | 11.25 | 11.45 |
| காலை 11.00 | 11.15 | 11.20 | 11.45 | 12.05 |
| காலை 11.20 | 11.35 | 11.40 | 12.05 | 12.25 |
| காலை 11.40 | 11.55 | 12.00 | 12.25 | 12.45 |
| பகல் 12.00 | 12.15 | 12.20 | 12.45 | 01.05 |
| பகல் 12.20 | 12.35 | 12.40 | 01.05 | 01.25 |
| பகல் 12.40 | 12.55 | 01.00 | 01.25 | 01.45 |
| பகல் 01.00 | 01.15 | 01.20 | 01.45 | 02.05 |
| பகல் 01.20 | 01.35 | 01.40 | 02.05 | 02.25 |
| பகல் 01.40 | 01.55 | 02.00 | 02.25 | 02.45 |
| பகல் 02.00 | 02.15 | 02.20 | 02.45 | 03.05 |
| பகல் 02.20 | 02.35 | 02.40 | 03.05 | 03.25 |
| பகல் 02.40 | 02.55 | 03.00 | 03.25 | 03.45 |
| மாலை 03.00 | 03.15 | 03.20 | 03.45 | 04.05 |
| மாலை 03.20 | 03.35 | 03.40 | 04.05 | 04.25 |
| மாலை 03.40 | 03.55 | 04.00 | 04.25 | 04.45 |
| மாலை 04.00 | 04.15 | 04.20 | 04.45 | 05.05 |
| மாலை 04.20 | 04.35 | 04.40 | 05.05 | 05.25 |
| மாலை 04.40 | 04.55 | 05.00 | 05.25 | 05.45 |
| மாலை 05.00 | 05.15 | 05.20 | 05.45 | 06.05 |

(சி.10231)

முகாமையாளர்,
பேருந்துப் பகுதி,
கிளிநொச்சி

# வட,கிழக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஒருவார காலத்தில் போராட்டம் நடத்த முடிவு

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் ஒருங்கிணைத்து ஒரு வார காலத்தில் வடபகுதியில் தீவிரபோராட்டம் நடத்துவதற்கு வடக்குக் கிழக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அடுத்தடுத்து நடாத்தப்பட்ட சிறப்புச் செயற்குழுக் கூட்டங்களில் பங்கு பற்றிய ஆசிரியர்களின், உற்சாகமான ஒத்துழைப்பை அடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டது. போராட்டம் நடைபெற வுள்ள வடமாகாணத்தின் குறிப்பிட்ட இடத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் கையொப்பங்களுடன் கூடிய மனு தயாரிக்கப்பட்டு சிறிலங்கா சனாதிபதிக்கும்,கல்வியமைச்சுக்கும் வழங்குவதென இக் கூட்டங்களில் முடிவெடுக்கப்பட்டது.

# சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

பாண்டியன் குளம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் 1ஆம் திகதி வரையும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், நிறுவனப்பணியாளரினால் சிரமதானப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் முதறகட்டமாக 27ஆம் திகதி காலை மல்லாவி வைத்தியசாலையிலும், 28ஆம் திகதி முன்பள்ளிகளில் சிரமதானமும், 29ஆம் திகதி முதியோர் கௌரவிப்பும், மரம் நடுகையும், 30ஆம் திகதி 15வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு விழாவும், நட்டாங் கண்டல் வைத்தியசாலையில் சிரமதானமும் நடைபெறவுள்ளதென தமிழர் புனர்வாழ்வுக் கழகவலயப் பணிப்பாளர் மூர்த்தி தெரிவிக்கின்றார். (24)

# கமக்கார அமைப்புக்கள் துணுக்காயில் ஒன்றுகூடல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் கமக்கார அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது.

தமிழீழ தேசியக் கொடியினை துணுக்காய் வலயப் பொறுப்பாளர் சி. ஈழக்கண்ணன் ஏற்றி வைக்க, மங்கல விளக்கினை கமநல சேவைக் குழுத்தலைவர் ஜ.தவராசா, துணுக்காய்ப்பிரதேச பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் கு. சசிக்குமார், கால்நடை வைத்திய அதிகாரி செல்வி. கிரிஜகலாபசுபதி, கமநல சேவை போதனாசிரியர் திருமதி.பு.சிவபாலன், கமக்கார அமைப்பின் சார்பில் மரியதாஸ் அகியோர் ஏற்றி வைத்தனர்.

நிகழ்வில் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அதற்கான உபகரணங்கள் ஒருவாரத்திற்குள் கமக்கார வங்கி மூலம் கடன்களை வழங்கவும், இதில் இரண்டு சக்கர உழவு இயந்திரம்10, கைதெளிகருவி 10, நீர் இறைக்கும் இயந்திரம் 10 இதைவிட விவசாயிகளுக்கு வயல் விதைப்புகளுக்கான செலவாக 10000 ரூபா வங்கி மூலம் கடன் வழங்கல் போன்ற கருத்துக்களை வழங்கினார்.

நிகழ்வில் கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள், கிராமசேவையாளர்கள், பாண்டியகுளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய இணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். (24)


## 01 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 07 - 01 - 1977

உதிர்வு 07 - 10 - 2003

### மாசிலாமணி சிறிகாந்தன் (காந்தன்)

திதி–26.09.2004

கண்ணுக்குள் மணியாக கருத்துக்குள் மொழியாக
விண்ணுக்குள் ஒளியாக மண்ணுக்குள் வளியாக
கடலோடு கடலாக கலந்த எம் உறவே!

வசந்தமான வாழ்விங்கே வந்ததென்று நாம் நினைக்க
வந்தான் காலனவன் உனதுயிரைப் பறிக்க
எண்ணமெலாம் நீ கலந்து எம்முயிரில் உறவாட
ஏங்குகிறோம் நாமெல்லாம் இனி எங்கே உனைப் பார்க்க
கண்ணிய வாழ்வையே காலமெலாம் நினைக்கச் செய்யும்
எண்ணிலா வேதனையை எப்படித்தான் தாங்குவதோ!
ஆண்டொன்று ஆகிவிட்டதடா காந்தா – இன்றும்
ஆறவில்லை எம் துயரம் அமைதியில்லா எம் நெஞ்சம்
புரியாத பல புதிர்கள் அறியாத பல வினாக்கள்
தெரியாத பதில்களுடன் ஏக்கமாய் எம் விழிகள்
பார்க்கத்தான் முடியவில்லை நீ ஒரு கனவு
படருதடா நெஞ்சமெலாம் அறுகு போல் உன் நினைவு.

இனிய உன் சாந்தி பெற
எம் இதய அஞ்சலிகள்
விழி நிறைய பெரு மழைகள்!

பிரிவால் துயருறும்
காந்தன்மாமா குடும்பத்தினர்
உற்றார், உறவினர்,நண்பர்கள்.

(5127)

## அறிவித்தல்

இனிய வாழ்வு இல்லத்தின் 07 ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 28.09.2004 அன்று பி.ப 2.00 மணிக்கு இல்லத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
இனிய வாழ்வு இல்லம்,
வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.

(5128)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 16 - 05 - 1917

மறைவு 28 - 08 - 2004

அமரர்

### திருமதி சரவணமுத்து வியாழம்மா

27.09.2004

அன்பிற்கு இலக்கணமே எமையீன்ற அன்னையே
ஆலயமாய் ஆகி நின்று உயிர் கொடுத்தாயே
விண்ணுலகேகி தெய்வமாகி நின்றாயே
எந்நாளும் உனை நினைந்து வணங்கிடுவோம் தாயே

அன்புடையீர்

எதிர்வரும் 27.09.2004 திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமறு அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

தகவல்
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி.9199)

## பயணியர் பேருந்துப்பணி

### வெள்ளாங்குளம் – முகமாலை

மேற்படி பேருந்துப்பணி முகமாலையில் இரவுத்தங்கல் செய்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக 01.10.2004 ஆம் நாளிலிருந்து நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

வெள்ளாங்குளம் – முகமாலை

| வெள்ளாங்குளம் | முழங்காவில் | செயபுரம் | வன்னேரி | அ.பெ.சந்தி | கந்தபுரம் | கிளிநொச்சி | பரந்தன் | புது.கா.சந்தி | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 12.00 | 12.30 | 01.00 | 01.30 | 02.00 | 02.15 | 03.00 | 03.20 | 03.50 | 04.05 |

முகமாலை–வெள்ளாங்குளம்


| முகமாலை | புது.கா.சந்தி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அ.பெ.சந்தி | வன்னேரி | செயபுரம் | முழங்காவில் | வெள்ளாங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 08.00 | 08.15 | 08.45 | 09.05 | 09-50 | 10.05 | 10.35 | 11.05 | 11.35 | 12.05 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி.10235)

## ஐ.சி.சி.மினி உலகக் கிண்ணம்

# பரபரப்பான இறுதியாட்டத்தில் மேற்கிந்திய அணி வசமானது



இங்கிலாந்தில் நடைபெற்று வந்த 4 ஆவது ஐ.சி.சி மினி உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்தைத் தோற்கடித்து மேற்கிந்தியதீவு அணி சம்பியனானது.

நேற்று ஓவல் மைதானத்தில் நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத்தீவின் ஒன்பதாவது விக்கெட்ஜோடி அபாரமாக ஆடி இங்கிலாந்தின் வெற்றிவாய்ப்பைப் பறித்தெடுத்தது.

இவ் வெற்றி மேற்கிந்தியத் தீவுக்கு கிடைத்த வரலாற்றுப் பெருமைமிக்க வெற்றியாக அமைந்த அதேவேளை, மினி உலகக் கிண்ணம் முதல் தடவையாக மேற்கிந்திய அணி. வசமானது.

கிரிக்கெட்டின் பிறப்பிடமாக விளங்கும் இங்கிலாந்து அணி. இதுவரை உலகக்கிண்ணத்தையோ, ஐ.சி.சி மினிகிண்ணத்தையோ கைப்பற்றாத நிலையில் இம்முறை அவ் வாய்ப்பை பெறுவதற்கு பிரகாசமான வாய்ப்பு இருந்தபோதும் அவ் வாய்ப்பும் கைநழுவிப் போனது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் லாறா. இங்கிலாந்து அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி. 49.4 ஓவரில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 217 ஓட்டங் களை பெற்றது.

மிகச் சிறப்பாகவும் இங்கிலாந்து அணிக்குத் தூணாகவும் நின்ற துணைத்தலைவர் ரெஸ்



கொதிக் 104 ஓட்டங்களைப் பெற்று ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். இவருக்கு துணையாக ஈடுகொடுத்து, சுழற் பந்து வீச்சாளர் அஸ்லிஹைஸ் இணைப்பாட்டமொன்றை வழங்கி 31 ஓட்டங்களைப் பெற்றார். இதனைத் தவிர ஏனைய அனைவரும் மிகக்குறைவான ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். மிகச் சிறப்பாக பந்து வீசிய ஹயின்ஸ் 22 ஓட்டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டுக்களையும், பிரிட்சாவ்02 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றி இலக்கான 218 ஓட்டங்களை நோக்கி துடுப்பாட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவு நான்காவது ஓவரில் அதன் முதல் விக் கெட்டை இழந்தது.

தொடர்ந்து இங்கிலாந்து ஆரம்பப் பந்து வீச்சாளர்களைத் தாக்குப்பிடிக்க முடியாது திணறிய மேற்கிந்தியத்தீவு 80 ஓட்டங்களுக்கு முக்கிய நான்கு விக்கெட்டுக்களை இழந்தது.

அதனை அடுத்து ஆடுகளம் புகுந்த ஏனைய வீரர்களும் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தனர்.

சந்தரபோல் மாத்திரம் தாக்குப் பிடித்து ஆடி, அணி ஓரளவு கௌரவமான ஓட்ட எண்ணிக் கையைப் பெற உதவினார். அவர் 47 ஓட்டங்களைப் பெற்று கொலிங்வூட்டின் பந்து வீச்சில் வோனிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.



இந்நிலையில் மேற்கிந்திய அணி கௌரவமான ஓட்ட எண்ணிக் கையையாவது பெறுமா? என்ற நிலையில் ஒன்பதாவது விக்கெட்டுக்காகச் ஜோடி சேர்ந்த ப்றவுணும், பிரிட்சாவூம் இணைந்து மேற்கிந்தியத்தீவைத் தூக்கி நிறுத்தியதுடன் இங்கிலாந்துக்கு அதிர்ச்சித்தோல்வியைப் பரிசளித்தனர்.

இவர்கள் இருவரும் இணைந்து பிரிக்கப்படாத 69 ஓட் டங்களைப் பகிர்ந்து 48.5 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் சந்தரபோல் 47 ஓட்டங்களையும்,பிரிட்சாவ் 34



ஓட்டங்களையும், ப்றவுண் 35 ஓட்டங்களை முறையே ஆட்ட மிழக்காது பெற்றனர்.

பிளிண்டொப் 3விக்கெட்டுக் களையும் ஹார்மி சன்,ஹொலிங் வூட் தலா இரண்டு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிரிட் சாவ் தெரிவானார்.

அத்துடன் நீண்ட காலத்தின் பின்னர் போட்டி நடுவர்களாக செப்பேட்டும் , பக்னரும் இல் லாத, இறுதிப்போட்டியாகவும் இது அமைந்திருந்தது.

## முதலிடத்தில் சீனா

கிரிஸ் தலைநகர் எதென்சில் பாராலிம்பிக் ஊனமுற்றோருக் கான போட்டிகள் நடக்கின்றன. கடந்த 17 இல் துவங்கிய இப் போட்டி வரும் 28 இல் முடிவடைகிறது. இதில் அதிக தங் கங்கள் குவிக்கவேண்டும் என் பதற்காக சீன ஒலிம்பிக் கமிட்டி 400இற்கும் அதிகமான வீரர், வீராங்கனைகளை எதென்சிற்கு அனுப்பியது. ஆறாம் நாளான நேற்று முன்தினம் வரை சீனா 26 தங்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துள்ளது. இதுவரை இவர்கள் மொத்தம் 73 பதக்கங்கள் குவித்துள்ளனர். பிரிட்டன் 18 தங்கம் உட்பட 43பதங்கங்களுடன் 2 ஆவது இடத்தில் உள்ளது.

## பிரிட்டனின் பிரபல பாரா ஒலிம்பியன் ரென்னிகிறே



பிரிட்டனின் பிரபலமான பாரா ஒலிம்பிய னான ரென்னி கிறே 1992இல் பார்சிலோனாவி லும் தொடர்ந்து அற்லாண்டா, சிட்னி பாரா ஒலிம்பிக்குகளில் வெற்றிகளைப்பெற்ற நிகழ்வானது பாரா ஒலிம்பிக்கில் அவர் ஆதிக் கம் செலுத்தும் நிகழ்ச்சிகளாயின.

இத்தகைய சிறப்புப் பெற்ற வீராங்கனையான ரென்னிகிறே குறுகிய அதிவேக ஓட்டத்தில் தங்கம் வென்றதன் மூலம் பிரிட்டனுக்கான 10 ஆவது பாரா ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தைப் பெற்று கொடுத்துள்ளார்.

35 வயதுடைய வீராங்கனை யான ரென்னிகிறே தற்போது நடைபெற்று வரும் பாரா ஒலிம்பிக்கில் 400 மற்றும் 800 மீற்றர் ஓட்டங்களில் போட்டியி டலாம் என்ற நம்பிக்கையுடன் உள்ளார்.

## சிறப்புற நடைபெற்ற வலுக்குறைந்தோருக்கான மரதன் ஓட்டப் போட்டி நிகழ்வு

வன்னிப் பெருநிலப்பரப்பின் ஒரேயொரு வலுக்குறைவுற்ற இல்லமாகிய இனிய வாழ்வு இல்லத்தின் 7 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டியில் இல்லச்சிறார்களின் மரதன் ஓட்ட நிகழ்வு (24.09.2004) காலை 5.30 மணிக்கு புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து ஆரம் பித்து, இனிய வாழ்வு இல் லத்தை வந்தடைந்தது. இந் நிகழ்வில் முற்றாகப் பார்வை யற்றவர்கள், பார்வைக் குறைபாடுடையவர்கள், செவிப்புலன் குறைபாடுடையவர்கள் ஆண், பெண் என ஆறு பிரிவாகக் கலந்து கொண்டனர். இந் நிகழ் வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பா ளர் வின்சன் அவர்கள் சிறுவர் இல்லங்களின் அ.பு.நிறுவகப் பிரதிப் பணிப்பாளர் சிவா அவர் களும், யுனிசெவ் பிரதிநிதிகள், காவல்துறை உத்தியோகத்தர்கள், கண்ணன் வைத்தியசாலை வைத்திய அதிகாரி, புதுக்குடியிருப் புப் பிரதேச தமிழர் புனர்வாழ் வுக்கழகப் பணிப்பாளர் செல் வன் அவர்கள், வள்ளிபுனப் பாடசாலை சாரணிய மாணவர் கள் பாரதி சிறுவர் இல்ல மாணவி யர் மற்றும், இல்லப் பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முகாமைக் குழுவினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரதன் ஓட்ட வீராங்கனைகளை உற்சாகப்படுத்தி நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்கள் விபரம் வருமாறு.

செவிப்புலன் குறைபாடுடைய ஆண். கை. உதயசீலன் 01 ஆம் இடம், சி. நகுலேசன் 02 ஆம் இடம், க.ஜஜீபன் 03 ஆம் இடம்.

செவிப்புலன் குறைபாடுடைய பெண். இ.தவரூபி 01 ஆம் இடம், ம.கிருஷ்ண வேணி 02 ஆம் இடம், சா.நிஜிதா 03 ஆம் இடம்,

முற்றாகக் கண்பார்வையற்ற ஆண், ப.இராசகுமார் 01 ஆம் இடம், ஐ.சுதர்சன் 02 ஆம் இடம், யோ.பார்த்தீபன் 03 ஆம் இடம், முற்றாகக் கண்பார்வை யற்ற பெண் ஜே. நிலாந்தி 01 ஆம் இடம்,இ.வினோதினி 02 ஆம் இடம்,ஸ்ரீ.சாரணியா 03 ஆம் இடம். கண்பார்வைக் குறைபாடுடையஆண், யோ.சதிஸ் 01 ஆம் இடம், ஆ.நகுலேஸ் வரன் 02ஆம்இடம், வீ.ரயுக் குமார் 03 ஆம் இடம்,

கண்பார்வைக் குறைபாடுடைய பெண் சு.சிந்துஜா 01 ஆம் இடம், உ.கஸ்தூரி 02 ஆம் இடம், வி.சுசிதா 03 ஆம் இடம்,




## இந்தியாவில் தொடரை வெல்வதென்பது கோபுரத்திற்குக் கலசம் அமைப்பது போன்றது -லாங்கர்

இந்தியாவுடனான தொடரை அதன் குகையிலேயே கைப்பற்றுவது ஒவ்வொரு அணியின் இலட்சியமாக இருக்கும் என அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர் ஜஸ்டின் லாங்கர் கருத்துத் தெரிவித்துள்ளார்.இந்தியாவுடன் 4 டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணியினர் நேற்று இந்தியா சென்றனர்.நாதன் ஹவுரிட், அணித்தேர்வுக்குழுத்தலைவர் டிரெவர் ஹான்ஸ் ஆகியோருடன் சிங்கப்பூர் வழியாக வெள்ளிக்கிழமை மும்பை சென்றடைந்தார் லாங்கர்.

இந்திய அணி பலம் வாய்ந்தது. அணியில் நட்சத்திர வீரர்கள் பலர் உள்ளனர். ஆதலால் அவர்களை இந்தியாவில் வெல்வதற்கு எங் களுக்குள்ளேயே சவால் விடுத்துக்கொண்டுள்ளோம்.

இந்தியாவில் தொடரை வெல்வது கோபுரத்திற்குக் கலசம் அமைப்பது போன்று, ஒவ்வொரு அணியினரும் இந்தியாவை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடிப்பதை உயர்ந்த இலட்சியமாகக் கொண்டிருப்பார்கள். ஸ்டீவ்வோ தலைமையில் கடைசியாக 2001 இல் இந்தியாவில் விளையாடியுள்ளேன். மறக்கமுடியாத அந்தத் தொடரை 1-2 என இந்தியாவிடம் இழந்தோம்.

கடந்த முறை இந்தியா வந்தபோது அவர்களது மாறுபட்ட கலாசாரம், கிரிக்கெட் மோகம் ஆகியவற்றைக்கண்டு வியந்து போனேன். ஆதலால் இந்தியா எனக்கு ரொம்பப்பிடிக்கும். இந்தியாவுடன் அவுஸ்திரேலியாவில் இந்த ஆண்டு தொடக்கத்தில் சிறப்பாக விளையாடினேன். அதேசமயம் இந்தியாவில் கடைசியாக விளையாடியபோது எனது திறமை மோசம் என்றும் சொல்லமுடியாது, பிரமாதம் என்றும சொல்லமுடியாது. இம் முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அவர்களைவெல்வதற்கு முயற்சிப்போம் என்றார் லாங்கர்.





## 22 போட்டிகளில் கலந்துகொள்ள 14 முல்லை மாணவர்கள் தெரிவு

தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டிக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 22 விளையாட்டுக்களில் 14 மாணவர்கள் பங்கு கொள்கின்றனர்.

இப்போட்டிகள் 30.09.2004 தொடக்கம் 02.10.2004 வரை கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. இப் போட்டிக் காக வட-கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இடங்களைப் பெற்ற மாணவர்கள் தகுதியுடையவர்களாவார்கள்..

## சிந்தனைக்கு



திலீபனின் தியாகம், காந்தியின் அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயற்பாட்டு வடிவம் கொடுத்தது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## விழிப்புணர்வூட்டிய தியாகி!

தியாகி லெப். கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் உலகில் ஈழத் தமிழர்கள் வாழும் இடமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. தியாகி திலீபனை 17 ஆண்டுகள் என்ன 17 நூற்றாண்டுகள் சென்றாலும் ஈழத் தமிழ் மக்கள், நினைவு கூருவதை மறந்துவிடப் போவதில்லை.

கொண்ட கொள்கைக்காக உயிரை விடுதல் என்பது. உயர்ந்த பட்ச செயலொன்றாகும். அதிலும், உண்ணாநோன்பிருந்து உயிரை விடுதல் என்பது இலகுவானதொன்றல்ல. ஏனெனில், இதற்கென பெரும் வைராக்கியமும், மனத்துணிவும் இருத்தல் அவசியமாகும்.

இந்தரீதியில், உண்ணாநோன்பிற்கான காரணம் தர்க்க ரீதியில் வலுவானதாக இருப்பதோடு, அதன் மீதான நம்பிக்கையானது மிக உயர்ந்த மட்டத்தில் இருத்தல் வேண்டும். அதாவது, தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்ததற்கான காரணம் மிகவும் வலுவானதாக இருந்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் அதன் மீது நம்பிக்கை வைத்துச் சாகும் வரையிலான உண்ணாநோன்பிற்கு ஒருவர் செல்ல முடியாது.

ஆகையில், தியாகி திலீபன் சாகும் வரை உண்ணாநோன்பிருக்கத் தீர்மானித்த வேளையில் அதற்கான காரணம் நீதியானதாகவும், தர்க்க ரீதியிலானதாகவும் இருந்தது மட்டுமல்ல, அத்தகைய காரணிகளின் மீது உறுதியான நம்பிக்கையை திலீபன் கொண்டிருந்தார் என்பதும் உறுதியானது.

இதேவேளை, தியாகி திலீபன் உண்ணாநோன்பிற்கான காரணங்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் பொய்ப்பிக்கவில்லை. அதாவது, இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இந்தியா வகிக்கப்போகும் பாத்திரம் குறித்து திலீபன் கொண்டிருந்த எதிர்பார்க்கை, நம்பிக்கை, திலீபனின் அரசியல் தீர்க்க தரிசனத்திற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

அந்நிய சக்திகள் இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எதிலும் உளப்பூர்வமாக ஈடுபடப்போவதில்லை; என்பதைத் தியாகி திலீபன் தெளிவாகவே உணர்ந்திருந்தார். இதற்கு உலக அரசியல் வரலாற்றைத் தியாகி திலீபன் புரிந்துகொண்டிருந்ததமை காரணமாக இருக்கலாம்.

இந்தியா சமாதான உடன்பாட்டைச் செய்தபோது தமிழர் தரப்பிற்கு அதில் உடன்பாடு இல்லாதபோதும் இந்தியாவுடனான நட்புறவை பேணும் வகையிலேயே புலிகள் இயக்கம் உடன்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தது. ஆனால், குறுகிய காலப் பகுதிக்குள்ளேயே இந்தியா தனது நோக்கத்தை வெளிக்காட்டத் தொடங்கியிருந்தது. தமிழ் மக்களின் நம்பிக்கையை அது சிதைவடையச் செய்தது.

இந்தியாவின் இத்தகைய போக்கு ஏற்படுத்தக்கூடிய விபரீதத்தைத் தியாகி திலீபன் ஆரம்பம் முதலே புரிந்துகொண்டிருந்தமை காரணமாகவே எமது மக்களுக்கு அதனை விரைந்து வெளிப்படுத்தல் அவசியம் என்பதை உணர்ந்தார் இதற்காகவே சாகும் வரை உண்ணாநோன்பிற்குத் தயாரானார். ஆனால், தனது உண்ணாநோன்பிற்கு இந்தியா மதிப்பளிக்கும் என்றோ, ஈழத் தமிழ் மக்கள் தொடர்பாக தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் என்றோ திலீபன் கருதவில்லை. தனது அர்ப்பணிப்பின் மூலம் தமிழ் மக்கள் விழிப்புணர்வு கொள்ள வேண்டும் என்றே விரும்பினார்.

தியாகி திலீபனின் இவ் எதிர்பார்க்கை மதிப்பீடு தவறானதல்ல. திலீபன் சாகும்வரை உண்ணாநோன்பிருந்தபோதும் இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. இதேவேளை, திலீபன் எதிர்பார்த்ததுபோல் தமிழ் மக்கள் விழிப்புணர்வு கொண்டதையும் எவருமே தடுத்து நிறுத்திவிட முடியாது போனது.

இதன் விளைவானது, தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டதொன்றா கியுள்ளது. இதே வேளை, சர்வதேச அரசுகளின் அணுகுமுறைகள், அவற்றின் அபிலாசைகள், நோக்கங்கள் என்பவற்றைத் தமிழ் மக்கள் இலகுவில் புரிந்துகொள்ளத்தக்கதான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வகையில் தியாகி திலீபன் தனது அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றின் மூலம் தமிழ் மக்களின் சுதந்திர வாழ்விற்கு வழிகாட்டியவர். தமிழ்மக்கள் பெரும் ஏமாற்றத்திற்கும், இழப்பிற்கும் உள்ளாகும் முன்னதாகவே அவர்களை தன் உயிர் ஈந்து நெறிப்படுத்தியவர். இதற்காகவே அவர் தன் உயிரைஈகம் செய்தார். தமிழ் மக்களின் சுதந்திர உணர்வும், விடுதலை தொடர்பான விழிப்புணர்வுமே! நாம் அவரின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதாக இருக்கும். அதுவே, அவருக்கான அஞ்சலியாகவும் இருக்கும்.

# விடுதலையின் பக்கமே கனேடியத்தமிழர் என்பதை பொங்குதமிழ் நிகழ்வு நிச்சயம் சொல்லும்

## கனேடியத்தமிழ் மாணவர் அமைப்பு இணைப்பாளர் சதா

கனடா பொங்கு தமிழ் நிகழ்வு தமிழீழத்தில் வாழ்கின்ற எம் உறவுகளுக்கும்,போராளிகளுக்கும், தேசியத்தலைமைக்கும் புலம் பெயர் கனேடியத் தமிழர்கள் விடுதலையின் பக்கம் இணைந்தே உள்ளார்கள் என்ற செய்தியை நிச்சயமாகச் சொல்லும் என கனேடியப் பொங்கு தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர்களில் ஒருவரும், நிகழ்ச்சியை முன்னின்று நடாத்தும் கனேடிய தமிழ் மாணவர் அமைப்பின் இணைப்பா ளருமான செல்வன் சதச்சந்திரன் (சதா) ஈழநாதம் பத்திரிகைக்குத் தெரிவித்தார். பொங்கு தமிழ் நிகழ்வுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த வேளையில்,அவருடன் தொடர்பு கொண்ட போது அவர்மேலும் தெரிவிக்கையில்

*. கனேடியத் தமிழ்மாணவர் அமைபபு என்றால் என்ன?

கனடாவில் மாணவர்கள் மத்தியில் பல்வேறு அமைப்புக்கள் உள்ளன. உதாரணமாக இளையோர் அமைப்பு மற்றும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்பாடசாலைகள் போன்றவற்றின் தமிழ்மாணவர் அமைப்புக்களின் ஒருங்கிணைந்த அமைப்பான கலலூரி பல்கலைக்கழகத் தமிழ்மாணவர் அமைப்பு, ( CUTSU ) மற்றும், கனேடியத்தமிழ் இளைஞர் முன்னேற்ற நிலையம், (CanTYD) போன்றவற்றை ஒரு குடையின் கீழ் கொண்டுள்ள அமைப்பே கனேடியத் தமிழ் மாணவர் அமைப்பு.

*. கனடாவில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் நிகழ்வை கனேடியத் தமிழ்மாணவர் அமைபபே முன்னின்றுநடத்த உள்ளது. பொங்குதமிழுக்கான கனேடியத் தமிழ்மாணவர்களின் பங்களிப்பு உங்களை உற்சாகப்படுத்துகிறதா?

நிச்சயமாக உற்சாகப்படுத்துகிறது. பொங்குதமிழுக்கான ஆரம்பமுன்னெடுப்புக்கள் தொடங்கப்பட்டதிலிருந்து முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் முழுநேரமாகத் தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். அத்தோடு கல்லூரி, பல்கலைக்கழகங்களின் தமிழ்ச்சங்கங்கள் பொங்கு தமிழ் தொடர்பான பரப்புரைகளைத் தமது மாணவர்கள் மத்தியில் மிகச்சிறப்பாகச்செய்து வருகின்றன. ரொரன்ரோவிலிருந்து தொலைவிலிருக்கும் பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்கள் தாமாகவே போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்து நிகழ்வில் பங்கு கொள்ள இருப்பது மிக உற்சாகத்தைத் தருகிறது. மாணவர்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளது.

*.கனடாவில் நடக்கும் பொங்குதமிழ் ஊடாக கனேடிய அரசிற்கு விடுக்கும் கோரிக்கைகள் என்ன?

பொங்குதமிழ் ஊடாக கனேடிய அரசிற்கு நாம் மூன்று கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

முதலாவதாக, தடைப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்கு கனேடிய அரசு கூடுதல் பங்களிப்பை வழங்கவேண்டும்.

இரண்டாவதாக, தாய்லாந்து , ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் வரிசையில் பேச்சுவார்த்தைக் கான தளம் அமைத்துக்கொடுப்ப தற்கு கனேடிய அரசு முன்வர வேண்டும்.

மூன்றாவதாக, சர்வதேச மற்றும் தமிழ்மக்களின் அங்கீகாரம் பெற்ற இடைக்கால நிர்வாகசபையின அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

*. தமிழீழத்துக்கு வெளியே புலம்பெயர் நாடுகளில் கனடாவிலேயே ஈழத்தமிழர்கள் அதிகம் வாழ்கிறார்கள். இந்தவகையில் கனடாவில் நடைபெறும் பொங்குதமிழ உலக அளவில் பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. இதற்கமைய பொங்குதமிழ் ஏற்பாடுகள் தொடர்பாக விபரிக்க முடியுமா?

முன்கூட்டியே கனடாவில் மொன்றியல், ஒட்டோவா போன்ற இடங்களில் பொங்குதமிழ் நடைபெற்றிருந்தாலும் இப்பொழுது நடக்கும் பொங்குதமிழே கனடாவின் அனைத்து மாநிலத்தமிழ் மக்களையும் ஒருங்கிணைத்து நடைபெறவுள்ளது. அனைத்து மக்களும் மிக எழுச்சியாக இருக்கிறார்கள். அனைத்து மாநிலங்களிலிருந்தும் மக்கள் நிகழ்வில் கலந்து கொள்வார்கள். ஆகவே கனடாவில் வரலாறு பதிக்கும் நிகழ்வாக இந்த நிகழ்வு அமைகிறது.

*.பொங்குதமிழிற்காக கனடாவிலுள்ள தமிழ் ஊடகங்கள், வர்த்தகர்கள், பழையமாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்களின் ஒருங்கிணைந்த ஆதரவு வெளிப்படையாக வழங்கப்படுகிறது. பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் என்ற வகையில், இது முதலாவது வெற்றியாகக கருதுகிறீர்களா?

நிச்சயமாக இதை ஒரு வரலாற்று வெற்றியாகவே நாங்கள் கருதுகிறோம். அன்றையதினம் அனைத்துத் தமிழ் மக்களும் நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டும், என்ற நோக்கில் வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி தமிழர் விடுமுறை நாளாக அறிவித்துள்ளார்கள். அதேபோல் மற்றைய சங்கங்களும் தம்மால் முடிந்த உதவிகளை அங்கு கலந்துகொள்ளும் மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளார்கள். நிச்சயமாக இது ஒரு பெரிய வெற்றி.

*. கனடாவில் நடைபெறும் பொங்குதமிழ் தமிழீழ எம் உறவுகளுக்கும், போராளிகளுக்கும், தேசியத்தலைமைக்கும் புலம்பெயர் கனேடியத் தமிழர்கள் விடுதலையின் பக்கம் இணைந்தேயுள்ளார்கள் என்ற செய்தியைச் சொல்லுமா?

நிச்சயமாகச் சொல்லும். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், 2001 ஆம் ஆண்டு முதலாவது பொங்குதமிழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. அப்போது பல அடக்குமுறைகளை உடைத்தெறிந்து பொங்குதமிழ் நிகழ்வை நடத்தி முடித்திருந்தார்கள். ஆனால் இங்கு அப்படியான அடக்குமுறைகள் இல்லை. நாம் கனேடியச்சட்டங்களுக்கு அமைவாக தெளிவாக எமது கோரிக்கைகளை கனேடிய அரசிற்கு முன்வைக்கப் போகிறோம். தேசியம், விடுதலை, எமது மக்களின் சுதந்திரமான வாழ்வு என்ற அடிப்படையில் கனேடியத் தமிழ் சமூகத்தின் ஒன்றுபட்ட குலாக்கோரிக்கைகள் இருக்கப் போவதனால், கனேடிய அரசு நிச்சயமாக இதைக்கருத்தில் எடுக்கும். இது தமிழீழ தேசியத்திற்குக் கனேடியத் தமிழ்மக்களின் மிகப்பெரிய பங்களிப்பாக இருக்கும்.

*. ஈழநாதம் ஊடாக எமது உறவுகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நாம் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது நினைவுகளெல்லாம் தமிழீழத்தையும் , தமிழீழமக்களையும் சுற்றியே உள்ளது. தமிழீழத்திற்காக நாம் என்ன செய்ய முடியுமோ செய்துகொண்டே இருப்போம் என உறுதியாகக்கூறுகிறேன்.

### தேர்தலின் போது அடையாள அட்டை


# அரசாங்கத்தின் பிரேரணைக்கு திருத்தம் கொண்டுவர எதிர்க்கட்சி முயற்சி

தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளைப்பயன்படுத்தும் அரசாங்கத்தின் பாராளுமன்றப் பிரேரணையில் சில திருத்தங்களைச் சமர்ப்பிக்க எதிர்க்கட்சி தயாராகி வருகிறது. எனினும் இந்தப் பிரேரணை எவ்வித திருத்தமுமின்றி எதிர்வரும் 7 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும் என அரசாங்கம் கூறுகிறது. எதிர்க்கட்சியில் உள்ளடங்கும் ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்தேசியகூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன, வடக்கு கிழக்கு மற்றும் தோட்டப்பகுதிகளில்பெருமளவானோருக்கு அடையாள அட்டைகள் இல் லையாததலால் அவர்களுக்கு அடையாள அட்டைகளைபெற்றுக்கொ டுக்கும் வகையில் இந்தப்பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது அடையாள அட்டைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றுக்கொடுப்பது தொடர்பான உறுதி மொழியாவது சட்டமூலம் நிறைவேற்றப்படும் முன்னர் தரப்பட வேண்டும் என் பதை வலியுறுத்துகின்றன. அதேநேரம் சுயாதீனதேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டு, அந்த ஆணைக் குழுவும் அடையாள அட்டைகள் குறிப்பிட்ட காலத் துக்குள் பெற்றுக்கொடுக்கப் படுவதற்கான உறுதிப்பாட்டை வழங்கவேண்டும் என எதிர்க்கட்சி கோரி வருகிறது. இந்த நிலையில் அரசாங்கம் எதிர்பார்த்ததைப் போன்று இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை தோட்டத்துறை மக்களுக்கு அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் உரியவாக்குறுதி இல்லாமல், தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம் இது தொடர்பில் கூறும் போது, தாம் இந்தவிடயம் சம்பந்தமாக சனாதிபதியுடன் பேச்சு நடத்தப்போவதாகத் தெரிவித்தார். ஏற்கனவே அடையாள அட்டைகள இல்லாத தோட்டப்புறமக்களுக்கு அடையாளஅட்டைகளை உரிய காலததிற்கு முன்னர் பெற்றுக்கொடுக்கமுடியாது போனால், தேர்தல் ஒன்றின் போது சத்தியக்கடதாசியை ஏற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் மாற்று யோசனை ஒன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு தெரிவித்துள்ளது. எனினும் அது இன்னமும் நிச்சயப்படுத்தப்பட்ட ஒன்றாகத்தெரிவிக்கப்படவில்லை

இந்தநிலையில் தோட்டத்தொழிலாளர்களின் அடையாள அட்டைப் பிரச்சினையைத்தீர்க்காமல் அரசாங்கம் அதன் சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ளமுனையு மானால் அது அரசாங்கத்திற்கும், தமக்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கவே செய்யும் என அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார். (32)

# கனடா பொங்குதமிழ் நிகழ்வில்...






## பத்மினி....

இது குறித்து அவர் பி.பி.சி.க்குத் தெரிவித்த போது இத் தகவலை வெளியிட்டார்.கனடாவின் தலைநகர் ஒட்டா வாவில் இருந்து தான் மறுமொழி வரவேண்டும் என்று கூறினார்கள். அப்படி மறுமொழி வந்து விசா வரப் புதன்கிழமையளவில் ஆகும். அதற்குப் பின் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் வராது. அவ்வாறு தருவதாய் இருந்தால் அதனைத் தரவேண்டாம் என்று, தான் கூறிய தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தியாகி லெப்....

மன் ஆலய முன்றலிலும், தென்மராட்சியில் சங்கத்தானை முருகன் ஆலய முன்றலிலும், தீவகத்தில் புளியங்கூடல் முத்துமாரியம்மன் ஆலயத்திலும்,நெடுந்தீவில் பிரதேசசபை மண்டபத்திலும், பூநகரியில் வாடியடிப் பகுதியிலும், கிளிநொச்சியில் சந்திரன் பூங்காவிலும் உட்பட பல்வேறு இடங்களிலும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை தியாகி திலீபனின் நினைவு நாட்களின் 11ஆம் நாளான நேற்று பல்வேறு இடங்களில் அடையாள உண்ணா விரதமும் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் சந்திரன் பூங்காவிலும், பரந்தன் பொதுச் சந்தை மைதானத்திலும் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் பிரதேச மக்களினால் உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

பூநகரிப் பிரதேசத்தின் வாடியடியிலும், மன்னார் வெள்ளாங்குளத்தில் தாழியாறுப்பகுதியிலும், மன்னார் நகர்ப்பகுதி பஸ் நிலையம் ஆகிய பகுதிகளிலும், புதுக்குடியிருப்பு மாவீரர் அஞ்சலி மண்டபத்திலும் துணுக்காய் தேறாங்கண்டலிலும் விசுவமடு மாவீரர் மண்டபத்திலும் மல்லாவிப் பிரதேசத்திலும் அடையாள உண்ணாவிரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தமிழீழப் பிரதேசம் எங்கும் தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டும், எழுச்சிக் கலை நிகழ்வுகள் மேற்கொண்டும் மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு,24,33,34,18,08)

## பொங்குதமிழ்....

இப்பிரசுரங்களை விநியோகிப்பதற்காக தற்காலிக வேலை வாய்ப்பு முகவர்களினூடாக, வேற்றினத்தவர்கள் விநியோகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

இது குறித்து வானொலி ஒன்றிக்குத் தகவல் தெரிவித்த தமிழர் ஒருவர், பிரசுரத்தை விநியோகித்த நபர்களிற்கு நிலைமையை விளக்கிய போதும் அவர்கள் குறிப்பிட்ட தொகைத் துண்டுப்பிரசுரங்களை விநியோகப்பதற்காக சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டதாகத் தெரிவித்து, துண்டு பிரசுரங்களைக் கேட்டபோது கையளிப்பதற்குப் பின்வாங்கினர் எனவும், இவ்வளவு துண்டுப்பிரசுரங்களையும் தந்தால் நான் உங்களிற்குப் பணம் தருகிறேன் எனக் கூறிய மேற்படி தமிழ் மகன், சிறு தொகைப் பணத்தை அவர்களிற்குக் கொடுத்து அவர்களிடமிருந்த முழுத் துண்டுப் பிரசுரங்களையும் பெற்றுக் கொண்ட தாகவும் தெரிவித்தார்.

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் யாழ்.இல் வெட்டிக்கொலை

ஈ.பி.டி.பி குழுவைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராஜா மோகன் (வயது 22) என்ற இந்த உறுப்பினர் கத்தியால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவரது வீட்டிற்கு வெள்ளிக்கிழமை இரவு வந்த சிலர் குறித்த நபரை அழைத்துச்சென்றிருந்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் நேற்றுக் காலை நெல்லியடி-பருத்தித்துறை வீதியின் முடக்காட்டுப்பகுதியில் வீதியோரமாக கழுத்தில் வெட்டுக்காயத்துடன் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(27)

# ஆவரங்கால் வாகன விபத்தில் மீன் வியாபாரி மரணம்

யாழ்.பருத்தித்துறை வீதியின் ஆவரங்கால் சிவன்கோவில் முன்பாக இடம்பெற்ற விபத்தில் மீன் வியாபாரி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் ஆவரங்கால் சிவன்கோவிலடியில் டிரக் வாகனத்துடன் உந்துருளி மோதியதால் ஏற்பட்ட விபத்தில் கரவெட்டிப் பகுதியினைச் சேர்ந்த கந்தன் குலசிங்கம் (51வயது)என்ற மீன் வியாபாரி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை அவரை மோதிய தாகக் கூறப்படும் டிரக் வண்டியின் சாரதி அங்கிருந்து தப்பித்துச் சென்றுஅச்சுவேலிபொலிஸ் நிலையத்தில் பின்னர் சரணடைந் திருந்தார்.

குறித்த மீன்வியாபாரி பயணித்த மோட்டார் சைக்கிள் நீண்ட நேரமாக சம்பவ இடத்திலேயே காணப்பட்டது. பின்னர் அம் மோட்டார் சைக்கிள் பொலிசாரால் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குஎடுத்துச்செல்லப்பட்டிருந்தது.

(27)

## தமிழரின்....

உடன்படிக்கை ஒப்பந்தப்படி நடந்து கொள்ளாமல் விட்டுக் கொடுக்கவும் முன்வராமல் அவர்கள் இருந்தால், அதற்கான நெருக்கடியைச் சந்தித்துத்தான் தீர வேண்டும். கொழும்பிலும், தெற்கிலும் நடக்கக் கூடியவைகளைப் பார்க்கும் போது தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை, நிரந்தர அமைதியைத் தர அவர்கள் ஒத்துழைப்பார்களா? என்பது ஒரு கேள்விக்குறியாகவே ஆகிவிட்டது. இன்று தெற்கிலேயே வாழ்க்கை நிலை மிகமோசமாகிவிட்டது. அவர்கள் என்றாவது ஒருநாள் எங்கள் தமிழ்மக்களின் நியாயத்தை ஏற்கத் தான்வேண்டும்.

எங்களை உணர்ச்சிவசப்படுத்தி ஆத்திரப்படுத்தி, தூண்டிவிடும் காரியங்களை அவர்கள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். நாங்களும் பொறுமையாகத்தான் இருக்கிறோம். ஆனால் எங்களின் பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு.

*** இந்தியாவின் நிலை இந்தப்பிரச்சினையில் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

இந்தியாவை ஒரு நேச சக்தியாகத்தான் பார்க்கிறோம். கடந்த காலங்களில் சில கொள்கை வகுப்பாளர்களால் ஏற்பட்ட சில நடவடிக் கைகள் காரணமாக சில கசப்பான நிகழ்வுகள் நடந்ததேயொழிய இந்தியாவை, இந்திய மக்களை, தமிழ்நாட்டு மக்களை ஒருநேச சக்தியாகவே நாங்கள் பார்க்கிறோம். இடையில் நடந்த சம்பவத்தை வைத்துத் தவறான கணிப்புகள் செய்ய வேண்டாம் என்பதுதான் எங்கள் எண்ணம். இங்கே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாசைகளையும், பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு தங்கள் நிலைப்பாடுகளை இந்தியா மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோம். ஏற்கனவே எங்களுக்கு நேசக்கரம் நீட்டியவர்கள்தானே தமிழ் மக்கள்

***அதற்கான முயற்சிகளை நீங்கள் எடுத்திருக்கிறீர்களா?**

இந்தியாவில் நாங்கள் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பாக இருப்பதால் வெளிப்படையான முயற்சிகளை எடுப்பதில் முடக்கம் ஏற்பட்டிருக்கிறது. பொடோ சட்டத்தினால் பல குரல்கள் அடக்கப்பட்ட நிலையே இன்றுதான் அங்கே பொடோ சட்டம் நீக்கம் மூலமாக மாறியிருக்கிறது. கலைஞர் போன்றவர்களின் பெரு முயற்சியினால் ஆளும் கட்சிக்குப் பரிந்துரைக்கப்பட்டு அந்தச் சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது. தவறான சில கொள்கை வகுப்பாளர்களால். நடந்த ஒரு தவறான சம்பவத்தைக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட அந்தத் தடை நீக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். தமிழகத்துடன் நல்லுறவை நாங்கள் மிகவும் எதிர்பார்க்கிறோம்.

## கனடா....

றத்திடல் நோக்கி விழா ஆரம்பமாவதற்கு முன்பதாகவே அலை அலையாக மக்கள் வரத் தொடங்கியிருந்தனர்.எங்கு பார்த்தாலும் தமிழர்களின் தலைகளே தெரியும் அதேவேளை ஒன்ராறியோ பாராளுமன்றத் திடலையொட்டிய வீதிகளனைத்தும் சனநெருக்கடியால் மூடப்பட்டுள்ளன. ஒன்ராறியோப் பாராளுமன்றத் திடலில் மாபெரும் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளதோடு இரண்டு பெரிய திரைகளும் நிகழ்ச்சிகளை நேரடியாக ஒலிப்பரப்பும் வகையில் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

எனினும் பாராளுமன்றத் திடலின் முன்னரங்கமும், அதன் சுற்றுவீதி மற்றும் எதிரேயுள்ள ரொரன்ரோப் பல்கலைக்கழக வளாகம் என்பன சனத்திரளால் நிரம்பியுள்ளதால் மக்கள் பாராளுமன்றத் திடலின் பின்பக்கமாக உள்ள பூங்காவிற்கே தற்போது அனுப்பப்பட்டு வருகின்றனர்.

அங்கும் மக்கள் உரைகளையும் நிகழ்சிகளையும் கண்டு களிக்கக்கூடியவாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு, சுமார் 1,000இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் இந்நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதில் பொலிசாருக்கும் பாராளுமன்றக் காவலாளர்களிற்கும் உதவி வருகின்றனர்.

எங்குபார்த்தாலும் மக்கள் தமிழீழ தேசியக் கொடிகளைக் கரங்களில் தாங்கிய வண்ணம் வலம் வருவதோடு, தமது தன்னிகரில்லாத் தலைவரின் படத்தையும் தாங்கிச் செல்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

வயது வேறுபாடின்றித் தமிழர்கள் ஒன்றுகூடியுள்ள இந்நிகழ்வு வர்ணிப்பதற்கான வார்த்தை களின்றி ஒரே உணர்ச்சிப் ப ாகமாக இந்நிகழ்வு காட்சியளிப்பதுடன் தமது தாய் நிலத்தின் விடிவு வேண்டியும், கனேடிய அரசு இப்பேச்சு முயற்சிகளில் பங்கேற்க வேண்டுமெனக் கோரியும் தமது ஆவலை வெளிப்படுத்துவதில் ஒட்டுமொத்தத் தமிழரும் தீவிரமாக உள்ளனர்.

இலங்கையின் சமாதான முயற்சியில் கனேடிய அரசு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று கோரியும், விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் யோசனையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சிறிலங்கா அரசை வற்புறுத்தக் கோரியும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்குமான சமாதானப் பேச்சு வார்த்தைகள் கனடாவில் இடம் பெற வேண்டுமென்று வற்புறுத்தியும் இப் பொங்குதமிழ் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. இந்த நிகழ்ச்சியை நடைபெறாமல் தடுப்பதற்கு சிறிலங்கா அரசு பல விதமுயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் எல்லாத் தடைகளையும் மீறி இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது.இந்த நிகழ்ச்சியில் உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து தமிழ் மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

# சாவு அறிவித்தல்



## சிவகுரு சண்முகம்

கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், அல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சண்முகம் (இளைப்பாறிய தபால் சேவகர்) நேற்றுக் காலமானார். அன்னார் காலம் சென்ற சிவகுரு பார்பதிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும்; காலம் சென்ற வேலுப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரரும்; காலம் சென்ற சிவகாமிப்பிள்ளை, பரிமளம் ஆகியோரின் அன்புக்கணவரும்; காலம் சென்ற வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி (இளைப்பாறிய தபால் சேவகர்), பரிமளம், செல்வரத்தினம், செல்வராணி, வேலையா, ஜெயவீரசிங்கம், காலம் சென்ற குணரத்தினம், சற்குணம், பாலாம்பிகை, பாலசிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்; சின்னத்தம்பி கந்தையாவின் பெறா மகனும்; சிவபாலசேகரம் (தபால் சேவகர்), சந்திரபாலன் (உபதலைவர் வடபிராந்திய பாரஊர்திச் சங்கம்), இந்திரபாலன் (கனடா), சிவறதி (பிரான்ஸ்), வேல்ராஜ் (மாவீரர்) அருள்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்; மனோரஞ்சினி, யோகம், காகேஸ்வரி, கோகுலகந்தினி, நாகநாதன், விஜிதா ஆகியோரின் மாமனாரும்; கந்தசாமி (சிறிவிக்னேஸ்வரா வவுனியா), தெய்வேந்திரம் (கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச), அமரர் நாகராசா, நாகேஸ்வரி (ஜேர்மனி), மாவீரர் கப்டன் நகுலன், சற்குணம் (நோர்வே), மலர்விழி (கனடா), விக்னேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் தாய் மாமனாரும்; வசந்தன், கஜந்தன் மாவீரர் ரூபிகா, ஆனந்து, கபிராஜ், கோபிராஜ், அருந்தஜா, சுரேந்தன், சுஜீபன், நஜீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26.09.2004 ஞாயிறு காலை 10.00 மணியளவில் அல்லிப்பளையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லிப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- மகன்**
**சண் சந்திரபாலன்.**

(5132)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.